Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 20 சனிக்கிழமை (02.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 245

Restaurant Tilko

10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)

Tilko Jaffna City Hotel
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
(C/1501)
















# இறுதிப்போரில் ஐ.நா.வின் பணி கண்டறிவதற்கு குழு நியமனம்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உயிரிழப்புகள் மற்றும் இதர பாதிப்புகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புடைய தொண்டர் நிறுவனங்கள் ஆக்கபூர்வமாக செயற்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிவதற்கு மூன்று பேர் கொண்ட நிபுணர் குழுவை ஐ.நா செயலர் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இந்தக் குழு 4 மாத காலத்திற்குள் தனது அறிக் கையை ஐ.நா. சபையிடம் கையளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன ஐ.நா. ஆலோசகர்களில் ஒருவரான சார்ள்ஸ் பெற்றி இந்தக் குழுவிற்கு தலைமை தாங்கும் அதேசமயம் ஐ.நா வின் உயர்மட்ட அதிகாரிகளான பென் மெட்ஜ்கொடும்னி, லினா சின்ஹா ஆகியோர் இதன் இதர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் எனவும், அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் செயற்பட்ட ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் ஆக்கபூர்வமான முறையில் செயற்படவில்லை எனவும் சர்வதேச மட்டத்தில் பல்வேறு தரப்புக்களில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்தே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விக்கிரகங்கள் திருட்டு தச்சன்தோப்பில் பரபரப்பு

(சாவகச்சேரி)


தச்சன்தோப்பு அன்னமார் கோவில் நேற்று இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு தெய்வ விக்கிரகங்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்னிரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவத்தின்போது மேற்படி ஆலயத்திலிருந்த இரண்டு பெறுமதி மிக்க தெய்வ விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

ஐம்பொன்னினால் உருவாக்கப்பட்ட சிவபெருமான் மற்றும் பார்வதி அம்மன் ஆகிய இரு விக்கிரகங்களுமே திருடப்பட்டிருக்கிறது.

இந்த இரு விக்கிரகங்களும்

19 ஆம் பக்கம் பார்க்க



## கூட்டமைப்பில் இல்லை பிளவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் வெளியிடப்படும் தகவல்களைப் போன்று கட்சியில் எவ்வித உட்பூசல்களும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் சம்பந்தனால் கூறப்பட்ட சில கருத்துகள் சர்ச்சைக்குரியவை என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாக வெளிவந்த செய்திகள் குறித்து சம்பந்தன் தெரிவிக்கையில் நாம் ஒரு ஜனநாயகக் கட்சி. எமது கட்சியின் அங்கத்தவர்களால் வெளியிடப்படும் கருத்துக்களை நான் மதிக்கிறேன். அக்கருத்துக்களுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பில் உயர்சபை கொள்கையளவில் இணக்கம்

### என்கிறார் சித்தார்த்தன்

(கொழும்பு)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் உயர்சபையை அமைப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் கொள்கையளவில் இணக்கம் வெளியிட்டுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அதில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று மாலை கொழும்பிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், மற்றும் ரெலோவின் சார்பில் சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், ஹென்றி, சிவாஜிலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி

19 ஆம் பக்கம் பார்க்க



தீவகத்தின் பிரதான மார்க்கமான நயினாதீவு, புங்குடுதீவு ஆகியவற்றை வேலணையிலிருந்து இணைக்கும் தாம்போதியம் (கடல்வழிப் பாதை) கடலரிப்பால் மிகவும் சேதமடைந்து போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

## புலிகள் மீதான தடை நீடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் பா.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பை தொடர்ந்தும் சட்ட விரோத இயக்கமாகவே கருத வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். 1992 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் புலிகளுக்கு எதிரான தடை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை

19 ஆம் பக்கம் பார்க்க

## 36 இலங்கையர்களை நாடு கடத்தியது பிரிட்டன்

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட 36 இலங்கையர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்தனர்.

நாடு கடத்தப்பட்ட 36 பேரிடமும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நாடுகடத்தப்பட்டவர்களில் 22 தமிழர்கள், 8 சிங்களவர்கள், 6 முஸ்லிம்கள் அடங்குகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பாக பிரித்தானிய அதிகாரிகள் 72 பேரும் மேற்படி விசேட விமானத்தில் சென்றனர்.

பிரித்தானியாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்தவர்களில் கோரிக்கை நிராகரிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கைக்கு பூரண ஆதரவு

### பிரிட்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பிரிட்டன் தனது பூரண ஆதரவை அளிக்குமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் மகாராணி எலிசபெத்தின் வைர விழாவை முன்னிட்டு கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நிலையான சமாதானத்தை உருவாக்கவும் பிரிட்டன் ஒத்துழைப்பு வழங்கும்.

இரு தரப்பு புரிந்துணர்வின்

19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலாளர் சம்மேளன தலைவராக எமிலியாம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவராக அ.எமிலியாம்பிள்ளை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன காரியாலயத்தில் நடைபெற்ற சம்மேளனத்திற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு முன்னாள் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே சம்மேளனத்தின் புதிய தலைவராக அ.எமிலியாம்பிள்ளையும் மேலும் 11 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவு நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள

19 ஆம் பக்கம் பார்க்க



# முறைகேடான வர்த்தக நடவடிக்கை 7 வர்த்தகர்கள் சட்டத்தின் பிடியில்

(திருநெல்வேலி)

வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 7 வர்த்தகர்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது. வேலணை, அல்லைப்பிட்டி, புளியங்கூடல் போன்ற இடங்களில் வேலணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.அனுசுதன் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையில் இவ் வர்த்தகர்கள் சிக்கிக கொண்டனர்.

காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, வியாபார உரிமம் இல்லாது வியாபாரம் செய்தமை, சுகாதாரச் சீரழிவுடன் காணப்பட்டமை என இவ்வியாபார நிலையங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

5 பலசரக்கு வியாபார நிலையங்களும் இரண்டு உணவகங்களுக்கும் இவற்றின் உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஒரு வியாபார நிலைய உரிமையாளர் நேற்று ஆஜராகவில்லை. இவரை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் ஆர்.எம்.எஸ். மகேந்திரராஜா உத்தரவிட்டார். தொடர்ந்தும் இப்படியான செயலகளில் ஈடுபடவேண்டாம் என நீதவானால் இவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (137)

# கண்காணிப்புக் கமரா இன்றுமுதல் செயற்படும்

யாழ் போதனா வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் அலுவலகத்தைக் கண்காணிப்பதற்காக அங்கு கண்காணிப்புக் கமரா ஒன்றை யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தினால் பொருத்தப்பட்டுள்ளது. இன்றுமுதல் வைத்தியசாலையின் ஏனைய சில பிரிவுகளில் பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கமராக்களுடன் இணைந்து தொழிற்படவுள்ளதாக தெரியவருகின்றது. ஏற்கனவே இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும், வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாகவும் இத்தகைய கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. வைத்தியசாலையின் பகுதிகளில் இடம் பெறும் குற்றச் செயல்கள், நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் களவு போன்றவற்றைத் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை விரிவாக்கப்பட்டு வருவதாக மேலும் தெரியவருகின்றது. (பா)

# ஆரம்ப பாடசாலை நேற்று ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக வட. இந்து ஆரம்பப் பாடசாலை நேற்றுமுதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவை 2011 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்தால் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்குவதற்காக இப்பாடசாலையின் முகாமைத்துவம் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை மூடிவந்தது.

இந்த நிலையில் இப் பிரதேசத்தில் உள்ள பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் பல்வேறு தரப்பினரிடம் விடுத்த வேண்டுகோள்களை அடுத்தே இப்பிரிவு தனியாக ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிலையில் இப் பாடசாலையின் ஆரம்ப பிரிவாக தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட புதிய பாடசாலையாக நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

# தமிழ்மொழித் தின விழாவும் பரிசளிப்பு வைபவமும்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின விழாவும், பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இவ்விழா சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

முத்தமிழ் எனும் தலைப்பில் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்புரையாற்றவுள்ளார். வரவேற்புரையினை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆற்றவுள்ளார். இவ்விழாவில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டில் மாணவர்களுக்கான பணபரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழவுகளும் இடம்பெறவுள்ளன. (06)

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகையா செந்தில்வேல் வயது - 37) என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்துகொண்டு வேப்புலி என்பவரிடம் போராயுதப் பயிற்சி பெற்றதாகப் பயங்கரவாதப் பொலிஸாரினால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. தடுப்புக்காவலில் வைக்கபட்டிருந்த பின்னர் யாழ். மேல் நீதிமன்றத்தில் இவர் மீது கடந்த நவம்பர் மாதம் 2011 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் கடந்த 24.01.2012 இல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு தவணைகளின் பின்னர் வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவருக்கு எதிராக உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவருக்கு முன்பாக இவரால் அளித்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சான்றாக இருந்தது.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு.ரெமிடியஸ் குற்ற ஒப்புதல வாக்குமூலம் எதிரியினால் அவரது சுயவிருப்பத்தின் பேரில் சுதந்திரமாகவும் சுயமாகவும் வழங்கப்படவில்லை எனவும் பலாத்காரம் பிரயோகிக்கப் பட்டே இவ் வாக்குமூலம் பெறப் பட்டது எனவும் வாதாடி அதனை நிராகரிக்கும்படியும் சமர்ப்பித்தார்.

விசாரணையை மேற்கொண்ட நீதிபதி ஜெ.விஸ்வநாதன் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய பதிவுசெய்யப்படவில்லை எனத் தெரிவித்து இவ் வாக்குமூலத்தை நிராகரித்துத் தீர்ப்பளித்தார். எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராயும் பொருட்டு வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரச தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரன் ஆஜரானார். (137)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை அவர்கள் யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
சக்கோட்டை.

(C/1572)

மக்கள் வங்கியின்...
51 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
யாழ் நகரில்
வருடத்தின்
365
நாட்களும்
வங்கிச் சேவை
அனைத்து வாடிக்கையாளர்களினதும் நன்மை கருதி
இலகு வங்கிச் சேவையை வழங்குவதற்காக
மக்கள் வங்கியின்
கன்னாதிட்டி கிளை
2012.06.03 (ஞாயிறு) தொடக்கம்
வருடத்தின் 365 நாட்களும்
அடகுச்சேவை உட்பட அனைத்து
வங்கிச் சேவைகளுடனும் திறந்திருக்கும்.
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
(C/1571)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணேஸ் கிருபாகரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (720782278V) தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வாகனவரிப் பத்திரம் ஆகியன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ தபாலகத்திலோ ஒப்படைத்துதவவும். (C/1514)

ஒறிபிளேம் கிளிநொச்சி நகரில்
இலவச அழகுகலை பயிற்சி



உங்கள் கனவுகளை நனவாக்க உங்களுடன் இணைகின்றது.
இலவச அழகுகலை பயிற்சியினால் பல அழகுக்கலை ஆலோசகர்களையும், சுயாதீன முகாமையாளர்களையும் உருவாக்கி வெற்றியடையச் செய்த சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் மீண்டும் கிளிநொச்சியில் இலவச அழகுக்கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. Facial, Gold Facial, Pedicure, Manucure, Threading, Hair Style, Bridal Make up... என அனைத்துப் பயிற்சி நெறிகளும் செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வீட்டில் இருந்தவாறே பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானமாக ரூபா 12000 இற்கு மேல் உழைப்பதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.

பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். அங்கத்துவப் பணம் 590 ரூபா செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

காலம் :- 03.06.2012
நேரம் :- 1.00 மணி
இடம் :- கிளி. மத்திய கல்லூரி

தொடர்புகளுக்கு.
0770784428

எதிர்காலம் உங்கள் கையில்

(C/1573)

## விளம்பர சேகரிப்பாளர்கள் தேவை

விளம்பரம் சேகரிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.
- மாதாந்த அடிப்படைச் சம்பளத்துடன் தரகுப் பணமும் வழங்கப்படும்.
- சிறந்த பேச்சாற்றலும் விளம்பரங்களைச் சேகரிக்கும் ஆற்றலும், இத்துறையில் முன்னனுபவமும் அவசியமாகக் கருதப்படும்.

அடிப்படைத் தகைமை :

- G.C.E A/L சித்தியடைந்திருத்தல்

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரத்தினை இல.373, பிரதான வீதி, தினமுரசு என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (இ)

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செயகிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும். -பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தமிழ்வாழ்க்கையின் துரதிர்ஷ்டம்!

நம்மைப் பற்றி நமக்கிருக்கும் நல்லபிப்பிராய நினைவைத் துறக்க முடியாமலிருப்பது ஒரு பெரிய பிரச்சினைதான்! அதிலும் நாம் ஆண்ட பரம்பரை என்ற கடந்தகால ஆதிக்கப் பெருமித உணர்வும் கொண்டவர்களாயிருந்தால், மற்றவரோடிணங்கி வாழ்வதற்கான தடைக்கல் மேலும் பெரியதாகி விடுகிறது.

நமது மக்கள் எவ்வளவு இழிநிலையில் அரைபட்டுக் கிடந்தாலும், 'நமக்கு மற்றவர்கள் சமதையானவர்கள் இல்லை' என்ற சிந்தனையிலிருப்பவர்களே இந்த மக்களின் அரசியல் குரலாக மேலோங்கியிருப்பது தமிழ்வாழ்க்கையின் துரதிர்ஷ்டம்தான்!

நமது 'சரி'கள் பற்றியே எப்போதும் நம் நினைவிருக்கிறது. ஆகவே, எதிர்த்தரப்பே மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு இறங்கி வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே நம் ஒரே அரசியல் செயல்பாடாகி விடுகிறது. காத்திருப்பு நீள நீள குற்றச்சாட்டுகளும் சமத்காரமான எதிர்ப்பு அறிக்கைகளுமே நம் கேடயங்களாகிக் கொள்கின்றன. பெருங்காய டப்பா நினைவுகளில், சிறுபிள்ளைத்தனமான முரண்டும் பிடிவாத மறுப்புகளுமே நமக்கான அரசியல்ஞானமாகத் தேங்கிவிட்டிருக்கிறது!

தீர்வு காண்பதற்குப் பேச வேண்டியது என்ன என்பதைப் புறக்கணிப்பவர்களாகி விடுகிறோம். எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் தற்திருப்தி அடைந்து கொள்கிறோம். எதிர்த்தரப்பை ஆவேசப்படுத்துவதில் – பிளவு அரசியலில் குறுகிய அரசியல் ஆதாயங்களைக் கண்டுகொள்கிறோம். குரலற்ற மக்கள் மீது துன்பங்களைச் சுமத்தியவாறே 'ரோச அரசியலை' தொடர்கிறோம். எதிரிக்கு வில்லங்கம் கொடுக்க முடியுமாக இருந்தால் நாம் மூக்கின்றி இருப்பது பற்றி என்ன கவலை?

நம்மிடம் சரிகள் இருப்பது போலவே எதிர்த்தரப்பும் தன் சரிகளை வைத்துக் கொண்டுதானிருக்கும் என்ற எளிய உண்மையை மறந்துவிடுகிறோம். பிரச்சினை என்னவென்றால், இந்த சரிகளைப் பேசிக் கொண்டிருப்பதால் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாகி விடுவதில்லை. தங்கள் தங்கள் தவறுகள், குற்றங்கள் குறித்த உணர்வும் பரஸ்பர மன்னிப்புப் பரிமாறலுமே நம்மை நல்லிணக்கம் நோக்கிச் செலுத்துவதாக இருக்கும்.

ஆனால், நம் அறிஞர்கள் பிரமுகர்கள் எனப்படுவோரும், மக்களுக்காகக் குரல் தருவதாகக் காட்டிக் கொள்வோரும் வீரம், ரோசம், பழம்பெருமை என்பவற்றைச் சொல்லி வன்முறை எதிர்ப்பு உணர்வைக் கைவிடாதிருப்பதே உயர்வான மனித மதிப்பீடுகளாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்புக் கோஷங்களின் மூலம் பகைவரைப் பணிய வைத்துவிடலாம் என்ற உணர்ச்சிகர ஏமாற்றினால் மக்களது வாழ்வைச் சிதைத்து வருகிறார்கள்.

இப்போதும் சாதாரண மக்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பதையே இவர்கள் வீரம் ரோசம் எனும் பண்புகளாக விதந்தோதிக் கொண்டிருக்கிறார்கள். எதார்த்த நிலையை மறைத்து இவர்கள் காட்டும் பழம்பெருமை மதிப்பீடுகள் பற்றிய முழக்கங்களால் மக்களை மயக்கநிலையில் வைத்திருப்பதுடன் வாழவொட்டாமலும் வதைத்து வருகிறார்கள்.

வாழ்வைப் பெறும் வழி பற்றியும் நம்பிக்கை கொடுக்காமல், வழிகளைத் தேடும் பேச்சுக்கும் நம்பிக்கை காட்டாமல், வெறுப்பு விரக்திக் குற்றச்சாட்டுப் பகை அரசியலிலேயே மக்களை மூழ்கடித்து வருபவர்களை நிறுத்தி நாம் கேள்வி கேட்க வேண்டும். இப்படிச் சிந்திப்பதே 'தமிழ்வீரத்திற்கு' இழுக்கு என்ற மதிப்பீடுகளிலிருந்து நாம் மீண்டாக வேண்டும்.

நம்மையே வதைத்துக் கொள்ளும் ரோசமும் வீம்பும் பழிவாங்கும் திருப்தியும் ஒருபோதும் மக்களது சுதந்திர வாழ்வாகாது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர் -

# தாதியர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு 40 மில்லியன் டொலரில் பயிற்சிக் கல்லூரி

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் நிலவும் தாதியர் வெற்றிடங்களுக்கு இலங்கையிலிருந்து தாதியர்களை அனுப்பும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான நவீன பயிற்சியினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தாதியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றினையும் மருத்துவமனை ஒன்றினையும் நிர்மாணிப்பதற்காக சவுதி அரேபிய நிறுவனம் ஒன்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார சவுதி அரேபியாவின் முன்னணி நிறுவனம் ஒன்றான சவுதி அரேபிய முதலீட்டுக் கம்பனியின் நிறைவேற்று முகாமையாளர் டாக்டர் மொஹமட் அசினுடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இதன் பிரகாரம் சவுதி அரேபிய முதலீட்டுக் கம்பனி இலங்கையில் நிர்மாணிக்கப்படும் இந்த தாதியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் மருத்துவமனை என்பவற்றிற்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொகை யினை முதலீடு செய்ய உள்ளதாக அமல் சேனாலங்காதிகார மேலும் தெரிவித்தார்.

100 படுக்கைகளைக் கொண்ட மேற்படி மருத்துவமனையுடன் நவீன வசதிகளைக் கொண்ட ஆய்வுகூடம் ஒன்றும் அமைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இத்தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு அமெரிக்க தாதியர் கல்லூரி ஒன்றின் உதவி பெறப்பட உள்ளதுடன், அதன்படி இங்கு பயிற்சியினை பூர்த்தி செய்யும் தாதியர்கள் அமெரிக்க மருத்துவமனைகளுக்கும் உயர் சம்பளத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார வலியுறுத்தினார்.

# பாடசாலை மாணவர்களுக்கான வடமாகாண கணிதப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட கணிதப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதில் இன்று காலை 7.30 மணிக்கு சிரேஷ்ட பிரிவிற்கான தமிழ் மொழிமூல கணித நாடகப் போட்டியும் 8 மணிக்கு. தரம் - 6, 7, 8 இற்கான தமிழ், ஆங்கிலமொழி மூலமான கணித வினாடிவினாப் போட்டியும் 10 மணிக்கு கணித செயற்பாட்டுப் போட்டியும் 12 மணிக்கு தரம் - 6,7,8 இற்கான தமிழ், ஆங்கில, சிங்கள மொழி மூலங்களிலான தேசியமட்ட போட்டிக்கான கணித வினாடிவினா தெரிவுப் போட்டியும் சிங்கள மொழி மூல மாகாண மட்ட கணித வினாடிவினா எழுத்துப் பரீட்சையும் ஆரம்ப மாகவுள்ளன.

நாளை காலை 7.30 மணிக்கு கனிஷ்ட பிரிவிற்கான தமிழ் மொழிமூல கணித நாடகப் போட்டியும் 8 மணிக்கு தரம் - 9, 10, 11 ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆங்கில மொழிமூலங்களிலான கணித வினாடிவினா போட்டியும் 12 மணிக்குத் தரம் - 9, 10 இற்கானதமிழ் ஆங்கிலம், சிங்கள மொழிமூலங்களிலான தேசியமட்டப் போட்டிக்கான கணித வினாடி வினா தெரிவுப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

# மகளின் காதலனால் தாக்கப்பட்ட தாய் மரணம்

(கொழும்பு)

மகளின் காதலனால் தாக்கப்பட்ட தாய் ஒருவர் உயிரிழந்துள்ள அதேவேளை அவ் இளைஞன் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டம், தனமல்வில, சூரியஆல என்ற பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞனது காதலுக்கு சம்மதம் தெரிவிக்காத காரணத்தினால் தனது காதலியின் தாய் மற்றும் தந்தை அப்பெண் ஆகிய மூவரையும் தாக்கியுள்ளார்.

இத் தாக்குதலின் காரணமாக அப்பெண்ணின் தாயார் உயிரிழந்துள்ளார். தந்தை மற்றும் யுவதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 36 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலின் பின்னதாக இளைஞன் விஷம் அருந்திய நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சரத் பொன்சேகா தொடர்பில் ஐ.தே.க. கவலைப்படவில்லை

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கவலைபபடவில்லை என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக அதாவது ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சரத் பொன்சேகா போட்டியிட்டார்.

சரத் பொன்சேகா சுயாதீனமாக இயங்குவதனைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை என கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுககப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், பெயரளவு தலைவராக பதவி வகிக்க ஒப்புக் கொள்வார் என ரணில் விக்ரமசிங்க அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளல் அல்லது பெயரளவுத் தலைவராக பதவி வகித்தல் ஆகிய சில வாய்ப்புக்களே சரத் பொன்சேகாவிற்கு காணப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா ஏதேச்சதிகாரமான தீர்மானங்களை எடுத்தால் அதனை நாடாளுமன்றத்தின் ஊடாக கட்டுப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி சிரேஷ்ட தலைவர்கள் கருதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகாவிற்கு வலுவான அரசியல் கட்சியொன்றோ அரசியல் பின்னணியோ கிடையாத காரணத்தினால் தனித்து இயங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் என அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீரான நகர உருவாக்கத்தை பூநகரி பிரதேசம் பெறும்

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேசம் எதிர்காலத்தில் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாற்றமடையும். அம் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு இப்பகுதியின் அபிவிருத்தியில் நாம் அதிக அக்கறை காட்டி வருகின்றோம் என யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



பூநகரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தையினை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


மீள்குடியேற்றத்திற்கு பின் பூநகரி பிரதேசம் துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. அதன் ஒருகட்டமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் சுமார் 42 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடைக் கட்டடத் தொகுதியினை அமைப்பதற்கான நிதியினையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும் இப்பகுதியை சூழ அமைந்திருக்கும் அரச நிர்வாக செயற்பாட்டு மையங்களுடன் எதிர்காலத்தில் மேலும் பல நிர்வாக செயற்பாட்டு மையங்களையும் அமைப்பதனூடாக திட்டமிடப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட நகர உருவாக்கத்தினை இப்பிரதேசம் பெறும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்கீல், பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், பிரதேச சபையின் செயலாளர் மேரி சிவகுமார், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொணடனர்.

# சுகாதாரமற்ற நிலையில் அச்சுவேலி வைத்தியசாலை



அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரி விக்கின்றனர்.

மேற்படி வைத்தியசாலை அரச வைத்தியசாலையாக இயங்கி வருகின்றது. இங்கு தினமும் 200 இற்கும் 300 இற்கும் இடைப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்லுகின்றனர்.

சிலர் மேலதிக சிகிச்சைக்காக விடுதிகளிலும் தங்கி இருக்கின்றனர். அவர்களுக்கு சீரற்ற கட்டில்களும் துப்பரவற்ற விடுதிகளுடன் கூடிய மலசலகூடமும் உள்ளன.

வைத்தியசாலையின் பின்புறச் சூழல், சுகாதார மற்ற நிலையில் காணப்படுவதால், டெங்கு நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதுடன், விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு ஏற்ற வசதிகள் எதுவும் இல்லாத நிலை காணப்படுகினறது.

அத்துடன் இதுவரை பிரேத அறையும் இல்லாமை யினால் விடுதியின் ஓரத்திலே சடலங்கள் வைக்கப்படுகின்றன. குறிப்பாக இவ் வைத்தியசாலைக்கு அபிவிருத்திச் சங்கம் இருந்தும் மந்த கதியான செயற்பாடுகளே காணப்படுவதாக நோயாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளையில் இங்கு 3 சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் இரண்டு பெண்களும் ஒரு ஆணுமே உள்ளனர். பரிசோதகராக 5 ஆண்களும் 6 பெண்களும், தாதியராக 3 ஆண்களும் 3 பெண்களும், வைத்தியர்கள் 3 பேரும் கடமையாற்றுகினறனர்.

இவ் வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து ஆளணிப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து செயற்படவேண்டும் என நோயாளர்களும், பொதுமக்களும் கோரிககை விடுக்கின்றனர். (116)

# கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும், 2011 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் விசேட சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் பாரியாரும், கௌரவ விருந்தினராக சட்டத்தரணியும் சட்ட ஆலோசகருமாகிய இராமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் வடவலய பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நல்லூர் பிராந்தியத் தலைவர் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரெத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலுக்கான ஆய்வுரையையும், வெளியீட்டுரையையும் மூத்த கல்வியலாளர் இ.மருதலிங்கம் ஆற்றுவார். நூலின் முதற்பிரதியினை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பெற்றுக் கொள்வார்.

# மஹோற்சவம்

(வடமராட்சி)

வடமராட்சி - நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஸ்நபன அபிசேகமும், பிற்பகல் 1.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மாலை 7.00 மணிக்கு சப்பறத்தில் திருவீதியுலாவும் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு இரதோற்சவமும், காலை 11.00 மணிக்கு பிராயச்சித்த அபிசேகமும் நடைபெறும்.

நாளை மறுதினம் திங்கட் கிழமை 10 ஆம் திருவிழா அன்று காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நறைவு பெறவுள்ளது. (116)

## வீட்டுத்தோட்டப்போட்டி முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியம் 2012 இன் கீழ் விவசாயத் திணைக்களத்தால் வருடம் தோறும் நடத்தப்படும் வீட்டுத்தோட்டப்போட்டி இம்முறையும் நடத்தப்படவுள்ளது.

இதில் கிராமமட்ட வீட்டுத்தோட்டம், மாணவர் வீட்டுத்தோட்டம், பாடசாலைத் தோட்டம், அலுவலர் நகர வீட்டுத்தோட்டம், அலுவலக வளாக தோட்டம் ஆகிய 5 பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பத்திகதி எதிர்வரும் 15 ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.போட்டியாளர்கள் விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் வீட்டுத்தோட்டப் போட்டி 2012 எனக்குறிப்பிட்டு விவசாய போதனாசிரியருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா அங்காடி வியாபாரிகளுக்கு நிரந்தரமான இடம் கையளிப்பு

(வவுனியா)


வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் அங்காடி வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு நிரந்தர இடம் ஒதுக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை அங்காடிவிற்பனை நிலையதொகுதியில் இடம்பெற்றது.

நகரசபையின் உபதலைவர் எம்.எம். ரதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 40 இறதும் மேற்பட்ட அங்காடி வியாபாரிகளுக்கு இடங்கள் வழங்கப்பட்டன.

அண்மைக்காலங்களில் வீதியோரங்களில் வைத்து பொருட்களை விற்பனை செய்பவர்களை நகரசபையினர் அகற்றியிருந்ததுடன் சிலர் மீது வழக்குத் தாக்கலும் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அங்காடி வியாபாரிகளுக்கு நிரந்தர இடம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வவுனியா பொழுதுபோக்கு கழகத்திற்குரிய காணியில் கழகத்தின் ஒப்புதலுடன் நிரந்தரகட்டடங்கள் அமைக்கப்பட்டு வியாபாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், வவுனியா வர்த்தக சங்கத்தின் தலைவர், உப தலைவர் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்களும் கலநது கொண்டிருந்தனர்.




கவிஞர் சோ.பத்மநாதன் எழுதிய "பர்மிய பிக்கு சொன்ன கதைகள்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ். ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் தென்னிந்திய திருச்சபை பேராயர் ஜெபநேசன் உரையாற்றுவதையும், கல்வியாளர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# போதைப் பொருள் பாவனையே இறப்புக்கள் அதிகரிக்க காரணம்

– கரவெட்டி பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன்



(வடமராட்சி)

மதுபாவனை மற்றும் சிகரட் பாவனையையும் முற்று முழுதாக ஒழிக்க முடியாவிட்டாலும் அதனைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அனைவரும் ஒத்து ழைக்க வேண்டும் என வடமராட்சி தெற்கு - மேற்கு கரவெட்டி பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு - மேற்கு கரவெட்டி பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி அதிகாரசபை ஆகியவற்றின் அனுசரனையில் கடந்த புதன் கிழமை மது மற்றும் புகையிலை பாவனையை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற பேரணியில் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மக்கள் நாள்தோறும் பல வகையில் இறந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலும் மது மற்றும் புகையிலைப் பாவனையால் அதிகமாக இறக்கின்றார்கள். சுகாதாரத் திணைக்களத்தின் இன்றைய புள்ளி விபரவியலடிப்படையில் 50 சதவீதமான இறப்புக்கள் இருதய நோயினாலும், 40 சதவீதமானவர்கள் புற்று நோயினாலும் இதுவரை இறந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இருதய நோய்களுக்கும் புற்று நோய்களுக்கும் அடிப்படைக்காரணமாக அமைவது மது பாவனையும், சிகரட் பாவனையுமாகும்.

இதற்காகத் தான் போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு மத்தியில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யூன் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையுள்ள ஒருவார காலத்துக்கு புகை எதிர்ப்புத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் புகைத்தலை முழுமையாக ஒழிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ் அமைதிப்பேரணி வதிரி திருஇருதயகக் கல்லூரி முன்னால் ஆரம்பிக்கப்பட்டு நெல்லியடி மதுபானசாலை ஊடாக நெல்லியடி மத்திய சந்தையுடன் நிறைவு பெற்றது. இவ் அமைதிப பேரணியில், கரவெட்டி உதவி பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் எஸ். சிவகுமார், FORD நிறுவன நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் இ.சிவநாயகம், மதுசாரம் மற்றும் புகைப்பொருள் தகவல் மைய மாவட்ட இணைப்பாளர் ஆ. கோடிஸ்வரன், நெல்லியடி பொலிஸ் அதிகாரி கங்கார, ஈ.பி.டி.பியின் கரவெட்டி இணைபபாளர் செந்தில்நாதன் மற்றும் கிராம சமூக அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)



உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முதலாவது ஸ்ரிக்ரை பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் அலுவலக வாசலில் ஒட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வெற்றிடமாகவுள்ள யா/சன் மார்க்க மகா வித்தியாலய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து வகுப்பு - 1 மற்றும் 2-I ஐச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளன.

அதிபர் சேவை உத்தியோகத்தரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரமே ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். அதிபர் சேவையில் விண்ணப்பிப்பவர்கள் தற்போதைய பாடசாலையில் 3 வருடங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். சேவை நீடிப்பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப படிவத்தைப் பெற்று எதிர்வரும் 06 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## "வேர் அறுதலின் வலி" கவிதை நூல் வெளியீடு

(குருநகர்)

சொந்த மண்ணில் இருந்து துடைத்தெரியப்பட்ட மனித ஆத்மாக்களின் துயரங்களைப் பதியும் கவிதைகள் அடங்கிய "வேர்அறுதலின் வலி" தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு-10இல் அமைந்துள்ள முஸ்லிம் மாதர் நிலையத்தில் 'நவமணி' பிரதம ஆசிரியர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். முஸ்லிம் இணையத் தளத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு வைபவத்தில் மூத்த இலக்கியப் படைப்பாளிகளும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர். 12 முஸ்லிம் படைப்பாளிகளுடன் கவிமணி நீலா பாலன் - வெலிமடை, நவாலியூர்க்கவிராயர் - யாழ்ப்பாணம் ஆகிய இருதமிழ்ப்படைப்பாளிகளும் கௌரவிக்கப்பட உள்ளனர். (68)

## முரசின் இன்றைய பலன்

(02.06.2012 –சனிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் திகதி. திரியோதசி முன்னிரவு 10.07 வரை. நட்சத்திரம் சுவாதி பிற்பகல் 2.44 வரை. அமிர்தசித்தம். இராகுகாலம் 8.52 - 10.22 வரை. சுபநேரம் 2.52 - 4.22 வரை. எமகண்டம் 1.22 - 2.52 வரை. குளிகைகாலம் 5.52 - 7.22 வரை. பிரதோச விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் தேர்ச்சி, எதிர்ப்புகள் மறையும், அதிகாரிகள் ஆதரவு, அகால போஜனம். |
| ரிஷபம் | மனத்தெளிவு, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, பகைவர் நட்புப் பாராட்டுவார், கனவு நிறைவேறும். |
| மிதுனம் | ஸதிரிகளால் நன்மை, புத்திரபாக்கியம், நினைத்தது நிறைவேறும், வேலைப்பளு அதிகரிக்கும். |
| கடகம் | மனத்தெளிவு, புத்திரர்வழியில்கவலை, தேவைகேற்ப பணவரவு, போட்டிகளில் அவதானம். |
| சிம்மம் | பணவரவுகள், மேலதிகாரிகள் பாராட்டு, பயண அனுகூலம், போட்டியில் பொறாமை அகலும். |
| கன்னி | பாராட்டு கிடைக்கும், ஆடம்பரச் செலவுகள், புத்திரால் சஞ்சலம், கொடுக்கல் வாங்கல்கள். |
| துலாம் | தர்ம சங்கட நிலை, தடைக்குக்குப் பின் சுப காரியங்கள், நண்பர் விரோதியாவார். |
| விருச்சிகம் | உடல் உள சௌக்கியம், திருமணம் கைகூடும், பெற்றோர் உதவி ,உடனிருப்போரால் தொல்லை. |
| தனுசு | தற்பெருமை, கணவன் மனைவி அன்னியோன்யம், அதிகாரிகள் ஒத்துழைப்பு, உயர்வு. |
| மகரம் | மதிப்பில் உயரும், திடீர் தனவரவு, வாக்கு சாதுரயத்தால் வெற்றி, அரச முயற்சியில் தடை. |
| கும்பம் | புகழாரம், இலட்சுமி கடாட்சம், அகால போஜனம், கடன் பட நேரிடும். |
| மீனம் | பெரியோர் ஆசி, பொன்பொருள் சேரும், கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி, வாக்கு பலிதம். |


## பொங்கல் விழா

(வடமராட்சி)

பொலிகண்டி - மருதாம்புலம் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வளந்து எடுக்கும் சம்பிரதாய நிகழ்வும் தொடர்ந்து நேர்த்திக் கடனுக்காக பக்த அடியார்களின் பொங்கல் வைபவமும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் அறிவிததுள்ளார்.

இதேவேளை கடந்த காலத்தில் இரவு பொங்கல் நடைபெறுவது வழக்கம். ஆனாலும் அண்மைக்காலமாக பொலிகண்டி பகுதியில் களவுகள் நடைபெற்றுள்ளதால் இம் முறை பகலிலேயே பொங்கல் பூசைகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

## பரமர் சங்கமம்



சமூக மட்டத்தில் வேறெவருக்கும் வழங்கப்படாத அளவுக்கு மரியாதை மாணவ - மாணவிகளுக்கு வழங்கப்படுவதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றோம்.

ஏனெனில் அவர்கள் எதிர்காலச் சந்ததிகள் மட்டுமல்லாமல் எதிர்கால சக்திகளும் என்பதால்; அதனை மாணவ சமுதாயம் நன்றாக உணர்ந்து அந் நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வது முக்கியம்.

மாணவர்கள் என்றால் கற்பவர்கள், படிப்பவர்கள் என்பதுடன் பார்த்துப் படிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். தன்னிடம் சுய புத்திக் கூர்மை இல்லாமல் இன்னொரு மாணவரின் பாடப் புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகளை வாங்கி கொப்பி அடிப்பவர்களும் மாணவர்கள் தான்.

மாணவர்கள் வேறெங்கும் இருந்து வந்து இந்த மண்ணில் குதித்தவர்கள் இல்லை. எங்களுள் இருந்தே ஒரு பருவ காலத்தில் மாணவர்களாக வரிக்கப்படுகின்றார்கள்.

இன்னொன்றைப் பார்த்து பிரதி செய்வதில் மாணவர்கள் கெட்டிக் காரர்களாகத்திகழ்வதை பரவலாக அவதானிக்கலாம். குறிப்பாக வீதிகளில் போக, வரேக்க ஐந்தாறு பேர் ஒன்றாகக் குவிந்தபடி செல்வது.

வீதிப் போக்குவரவில் கவனம் எடுக்காமல் பெலத்த குரலில் ஒருவரோடை ஒருவர் உரையாடிக் கொண்டு செல்வது, பக்கத்தில செல்பவரின் சைக்கிள் ஹாண்டிலில் பிடித்தபடி அல்லது உந்துருளி மிதியில் கால் வைத்துக் கொண்டு பயணிப்பது இவ்விதம் இன்னொருவரைக் கண்டால் அதை உடனடியாகவே கொப்பி அடித்துச் செயல்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

அது போலவே மீட்டல் வகுப்புகள் முடிவடைந்ததும் நேரே வீடுகளுக்குப் பயணிக்காமல் வீதியோரங்களில் கூட்டம் கூட்டமாக தரிந்து நின்று மாணவிகளின் வரவைப் பார்த்து ஏனைய போக்குவரவுகளுக்கு இடையூறாகத் திகழ்வது போன்ற இன்னோரன்ன பயன்பாடற்ற கற்பிதங்களைக் கொள்வதும் மாணவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவையெல்லாம் சமுதாயத்தில் அவர்கள் பார்த்துக் கற்றுக் கொண்டவையாகவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் புறக்கணித்து நல்ல மாணவ மணிகளாகத் திகழ எத்தனையோ மார்க்கங்கள் நாளிலும், பொழுதிலும், பாடசாலைகள் பொது அறிவுறுத்தல்கள மூலமாக ஆசான்களும், பெற்றோர்களும் வழங்கிக் கொண்டுந்தான் இருக்கின்றார்கள்.

என்றாலும் சமுக விரோத பயன்பாடற்ற செயற்பாடுகளில் மாணவர்களின் ஈர்ப்பு அதிகமாக இருப்பது வாழையடி வாழையாக வந்த கோலமென்றுதான் கொள்ள வேண்டியிருக்கு. எல்லோரும் மாணவப் பருவத்தில் செய்த குறும்புகளை பிற்பாடு மீட்டிப் பார்ப்பதில்லையா செல்லுங்க பாப்பம்...

"களவையும் கற்றுமற" என்பதற்கு ஏற்ப மாணவப் பராயத்தில் கற்றுக் கொள்ளும் தீயவற்றை மறந்து விடுவது சாலச் சிறந்ததல்லவா?






(படப்பிடிப்பு : சுரேஷ்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த 40 தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி முகாம் நிறைவு நேற்று சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஒழுங்கு படுத்தப்பட்ட இப்பயிற்சி முகாமை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பயிற்றுவிப்பாளர் வி. சுப்பிரமணியம் நெறிப்படுத்தி வழங்கினார். இறுதி நாளான நேற்று பங்குகொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சி முகாம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் ஆகியன இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 20)

## தென்னாபிரிக்காவுக்கு மாற்றம்

NOKIA CHAMPIONS LEAGUE TWENTY 20


(புதுடில்லி)

இந்தியாவில் நடக்க இருந்த நான்காவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி -20 தொடர், தென்னாபிரிக்காவுக்கு இடமாற்றப்படுகிறது.

உள்ளூர் ருவென்டி-20 தொடரில் சாதித்த கழக அணிகளுக்கு சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாட வாய்ப்பு கிடைக்கும். நான்காவது தொடர் வரும் ஒக்டோபரில் (10-28) சென்னை, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூர், டில்லி ஆகிய 5 இடங்களில் நடக்கவிருந்தது. ஆனால், இந்த சமயத்தில் கொல்கத்தாவில் துர்கா பூஜை நடைபெறும். எனவே, அங்கு போட்டிகளை நடத்துவதில் சிரமம் ஏற்படும். தவிர, நாட்டின் பல பகுதிகளில் மழைக் காலம் தொடங்கி விடும் என்பதால், போக்குவரத்து இடையூறு, பாதுகாப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகள் உருவாகும். இதனைக் கருத்தில் கொண்டு தொடரை, வேறு இடத்துக்கு மாற்றத் திட்டமிடப்பட்டது.

இதுதொடர்பாக சமீபத்தில் சென்னையில் நடந்த சம்பியன்ஸ் லீக் நிர்வாக சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில், தென்னாபிரிக்காவுக்கு இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கு வரும் 26ஆம் திகதி கோலாலம்பூரில் மீண்டும் நடக்க உள்ள நிர்வாக சபைக் கூட்டத்தில் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

## டெஸ்ட் போட்டிகளில் மட்டும் கெவின்



(லண்டன்)

சர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி – 20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும், இனி இங்கிலாந்து அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடப் போவதாகவும் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் பிறந்த கெவின் பீற்றர்சன் (31), இங்கிலாந்து அணிக்காக டெஸ்ட், ஒருநாள் மற்றும் ருவென்ரி – 20 போட்டிகளில் , விளையாடி வந்தார். தனது அதிரடி ஆட்டத்தால் இரசிகர்களைக் கவர்ந்த பீற்றர்சன், 21 ஒருநாள் போட்டியிலேயே 1000 ஓட்டங்களைக் கடந்து மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் ரிச்சர்ட்சின் சாதனையை சமன் செய்தார். டெஸ்ட் போட்டிகளிலும், முதல் 25 டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் ஆஸி. நட்சத்திரம் பிரட்மனுக்கு அடுத்த இடத்தை பிடித்ததுடன், விரைவாக 5000 ஓட்டங்களை எட்டிய வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்து அசத்தினார். இங்கிலாந்து அணியின் கப்டனாகவும் இருந்துள்ள இவர், ஐ.பி.எல். 5ஆவது சீசனில் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்காக விளையாடிய 8 லீக் ஆட்டங்களில் 305 ஓட்டங்களை விளாசியது (அதிகம் 103*, சராசரி 61.00) குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி 20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறு வதாக பீற்றர்சன் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: "சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதால் உடல் சோர்வு அதிகரித்து வருகிறது. அதனால், 2015 உலக கிண்ணப் போட்டிக்கு இளம் வீரர்களைத் தயார் செய்வதற்கு வசதியாக ஒருநாள், ருவென்ரி – 20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற இதுதான் தக்க சமயம் என கருதுகிறேன். தேர்வுக் குழுவினர் விரும்பினால், இலங்கையில்நடைபெறவுள்ள உலகக்கிண்ண ருவென்ரி – 20போட்டியில் மட்டும் விளையாடத் தயாராக உள்ளேன். இங்கிலாந்து அணிக்காக டெஸ்ட்போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன். ஐ.பி.எல். போட்டியில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை எனத் தெரிவித்தார்.

## ரபேல் நடால் தகுதி



(பாரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) தகுதி பெற்றார். இரண்டாவது சுற்றில் உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினுடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 6-2, 6-2, 6-0 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்றார். இங்கிலாந்தின் ஆண்டி மர்ரே 1-6, 6-4, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் ஜார்கோ நியமி னனை (பின்லாந்து) வீழ்த்தினார். முன்னணி வீரர்கள் சோங்கா (பிரான்ஸ்), டேவிட் பெர்ரர் (ஸ்பெயின்), மிகைல் யூஜ்னி (ரஷ்யா) ஆகியோரும் 3ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளனர். ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி போபண்ணா ஜோடி 6-1, 5-7, 3-6 என்ற செட் கணக்கில் பிரான்சின் மார்க் கிருவல் ரோஜர் வாசலின் ஜோடியிடம் தோற்று முதல் சுற்றிலேயே பரிதாபமாக வெளியேறியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்), பெத்ரா குவித்தோவா (செக்.), ஏஞ்சலிக் கெர்பர் (ரஷ்யா) ஆகியோர் 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர். முன்னாள் முதல் நிலை 1 சேரினா வில்லியம்சை தொடர்ந்து அவரது சகோதரி வீனஸ் வில்லியம்சும் (அமெரிக்கா) அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறி உள்ளார்.



## விஸ்வநாதன் ஆனந்திற்கு புட்டினின் தேநீர் விருந்து

(மொஸ்கோ)

சதுரங்கப் போட்டியில் உலக சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், அவரை எதிர்த்து விளையாடிய இஸ்ரேலின் போரீஸ் கெல்ஃபான்ட் ஆகியோருக்கு ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டீன் தேநீர் விருந்தளித்தார்.

இந்த நிகழ்ச்சி புட்டீனின் இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அப்போது சம்பியன் பட்டம் வென்ற ஆனந்தையும், அவருக்கு கடும் சவால் அளித்த போரீஸ் கெல்ஃபான்டையும் அதிபர் பாராட்டினார்.

புதன்கிழமை நடைபெற்ற உலக சதுரங்கப் போட்டியின் டைபிரேக்கர் சுற்றில் ஆனந்த் 2.5-1.5 என்ற கணக்கில் போரீஸ் கெல்ஃபான்டை வீழ்த்தி 5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

இதேவேளை, ஐந்தாவது முறையாக உலக சம்பியன் பட்டம் வென்ற ஆனந்துக்கு இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

## தங்க மகனின் தங்கம் சாத்தியமாகும்




(ரோம்)

உலகின் அதிவேக மனிதரான ஜமெய்காவின் உசேன் போல்ட்டின் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. 100 மீற்றர் ஓட்டத்தில் இந்த வருடத்தின் சிறந்த காலப்பெறுமதியை அவர் நேற்று முன்தினம் நிலைநாட்டினார்.

இத்தாலி டயமன் லீக் மெய்வல்லுநர் போட்டிகளில் ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டியில் மிகுந்த எதிர்பார்ப்புடன் பங்கேற்ற உசேன் போல்ட் 100 மீற்றரை 9.76 செக்கன்களில் பூர்த்தி செய்தார். இது இந்த வருடத்தில் 100 மீற்றர் ஓட்டத்தை கடக்க எடுத்துக் கொள்ளப்பட்ட மிகக்குறைந்த காலப் பெறுதியாகும்.


அத்துடன், டயமன் லீக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்தில் சாதனையாகவும் பதிவானது.


போட்டியின் பின்னர் கருத்து வெளியிட்ட போல்ட், ஐரோப்பிய டயமன் லீக் மெய்வல்லுநர் போட்டியில் சிறந்த காலப்பெறுதியை பதிவு செய்ய முடியாமல் போனதையிட்டு வருத்தப்படுவதாக தெரிவித்தார்.

எனினும், எதிர்பார்த்ததைவிட குறைந்த காலப்பெறுதியில் ஓட முடிந்தமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். 100 மீற்றர் 9.57 செக்கன்களில் கடந்த உலக சாதனைக்கு சொந்தக்காரராக போல்ட் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### ஆசியா கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

# அருணோதயா மாணவர்கள் பவித்திரா, லவணன் வாய்ப்பு





(யாழ்ப்பாணம்)

15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை அருணோதயாக் கல்லூரி வீரர்களான பவித்ரா, லவணன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

15ஆவது ஆசிய கனிஷ்ட மென்வல்லுநர் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொழும்பு சுகதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இலங்கையிலிருந்து 144 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று பேரே இப்போட்டியில் பங்குகொள்கின்றனர். அதுவும் யாழ். மாவட்டத்திலுள்ள அருணோதயாக் கல்லூரியில் இருந்து இந்த மூன்று பேரும் பங்குகொள்கின்றனர்.

கோலூன்றிப் பாய்தல் வீராங்கனையான ஏ. பவித்ரா மற்றும் கோலூன்றிப் பாய்தல் வீரரான பா. லவணன் ஆகியோருடன் இலங்கையின் 15 பயிற்சியாளர் குழாமில் அருணோதயக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் தர்மகுலசிங்கம் பாகீஸ்வரனும் இப்போட்டியில் பங்குகொள்கின்றார்.

பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டி 11ஆம் திகதி காலை 10.00 அணிக்கும், ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டி 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிக்கு இலங்கை சார்பாக சிறப்பான வீரர்களே தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இதில் அதிகமான வீர, வீராங்கனைகள் பதக்கங்களை கைப்பற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத் தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (93)



யாழ்ப்பாண செயலக விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் உ. வர்ஷினி விசேட பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 9 வயதான வர்ஷினி பெண்களுக்கான 200 மீற்றர் மற்றும், 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் பங்குகொண்டு முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பிடித்துக் கொண்டார். வயதில் சிறுமியாக இருந்தபோதிலும் பெரியவர்களுடன் ஓடி மேற்படி இடங்களைப் பெற்றமையைப் பாராட்டி போட்டி ஏற்பாட்டாளர் குழு, அவரின் தன்னம்பிக்கையையும் பாராட்டி, இவரின் செயற்பாடு அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# முதலிடத்திற்கு 5 இலட்சம்

### விளையாட்டுத்துறை அமைச்சர்

(கொழும்பு)

15ஆவது ஆசிய கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கேற்று தங்கப் பதக்கம் வெல்லும் இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா பரிசு வழங்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு மூன்று இலட்சம் ரூபாவும் வெண்கலப் பதக்கம் வெல்வோருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் பரிசளிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

15ஆவது ஆசிய கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டிகள் ஜூன் 09 தொடக்கம் 12ம் திகதிவரை சுகததாச விளையாட்டரங்களில் இடம்பெறவுள்ளதாகவும், இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன், விளையாட்டுத்துறையில் இலங்கை மேலும் வலுப்பெற வேண்டும் என்றும், இவ்வாறான ஊக்குவிப்புத் தொகைகள் விளையாட்டு வீரர்களை மேலும் உற்சாகப்படுத்தும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# மைதானத்தை புனரமைக்க நூறு மில்லியன் ஒதுக்கீடு


(கொழும்பு)

எதிர்வரும் செப்டம்பரில் இலங்கையில் நடத்தப்படவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படும் மைதானங்களை நவீனமயப்படுத்துவதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் நடத்தப்படும் ஆர்.பிரேமதாஸ, பல்லேகல, காலி சர்வதேச விளையாட்டரங்கு ஆகியவற்றை நவீனமயப்படுத்துவதற்காகவே இந்த நிதி செலவிடப்படவுள்ளது.

வீரர்களுக்கு மேலதிகமாக இரண்டு ஓய்வறைகளை நிர்மாணிக்க வேண்டியுள்ளதால் இந்த மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. ருவென்ரி - 20 உலகக் கிண்ண போட்டித் தொடரில் நாளொன்றுக்கு இரண்டு போட்டிகள் நடத்தப்படுவதால் மேலதிகமாக இந்த ஓய்வறைகள் நிர்மாணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# இலவச நீச்சல் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் நீர் சார் விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள யாழ். குடாநாட்டின் பாடசாலை மாணவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி பாடநெறியின் முதல் கட்டமானது காரை நகரில் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இப்பிரதேச பாடசாலை மாணவர்கள் இந்நீச்சல் பயிற்சிகளில் ஈடுபட்டதாகவும் யாழ். மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்திலும் பயிற்சிகள் நடாத்தப்பட்டதாகவும் பொலிஸ் நீர் சார் விளையாட்டு சங்கம் தெரிவிததுள்ளது.

நாட்டின் தற்போதைய சமாதான சூழலில், இவ்வாறான வேலைத்திட்டங்களில், கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தமையை யிட்டு பெருமகிழ்ச்சியடைவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.



அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மாவட்ட மட்டத்திலான இரத்தினம் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர், ஆவரங்கால் மத்தி அணிகள் மோதியபோது... இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (02)

# இன்று மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் இறுதி நாள் நிகழ்வு நாளை இடம்பெறும் என்றும், அன்றைய தினம் மாலை பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# வவுனியா புதுக்குளம் ம.வி.யில் சர்வதேச மெய்வல்லுநர் தினம்



(வவுனியா)

17ஆவது சர்வதேச மெய்வல்லுநர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தினதும் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினதும் வழிநடத்தலின் கீழ் வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என இரு பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்களிற்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்றவர்களிற்கு சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தின் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது மெய்வல்லுநர் போட்டி தொடர்பான சில நுணுக்கமான விடயங்கள் வீர, வீராங்கனைகளுக்கு கற்றுக்கொடுத்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட எல்லே இன்று


(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட எல்லே போட்டி இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் இப்போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. இதில் பெண்களுக்கான போட்டி மகரகம விளையாட்டு அரங்கிலும், ஆண்களுக்கான போட்டி கம்பஹா பொது விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை, இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டம் சார்பாக இரு பிரிவு அணிகளும் கலந்துகொள்கின்றனர். இப்போட்டித்தொடரில் பங்குகொள்ளவுள்ள அணியினர் நேற்றையதினம் கொழும்பைச்சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (93)



**அரசியல் தீர்வு இல்லையென்றால் அடுத்த கட்டமாக மக்களை இணைத்த போராட்டங்களை நடாத்துவதற்கு முன்வர வேண்டும். கூட்டமைப்பிற்கு அதில் விருப்பமும் இல்லை. துணிவும் இல்லை. சொகுசு வாழ்க்கைக்காக அவர்கள் அரசியலுக்குள் வந்தார்களே தவிர சிரமம் எடுத்து மக்களுக்கு பணி செய்யவோ, போராட்டம் நடத்தவோ அவர்கள் வரவில்லை. கூட்டமைப்பு தொடர்பாக மக்கள் அதிருப்தியுற்ற நேரங்களிலெல்லாம் மாவை சேனாதிராஜா போராட்டம் நடத்தப் போவதாக குரல் எழுப்புவார் அவ்வளவுதான்.**



# மிளகாய் அரைப்பதற்கு வாகான தமிழர் தலைகள்!

**- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு செல்வதாக முடிவெடுத்து விட்டது. அமெரிக்க,இந்திய அழுத்தங்கள் தான் இதற்குப் பிரதான காரணம். தெரிவுக் "குழுவிற்கு செல்வதற்கு முன் நிபந்தனைகள் என்ற பெயரில் சில பசப்புக் காரணங்களைக் கூறப்போகின்றது. மங்கள முனசிங்க அறிக்கை தொடக்கம் சர்வ கட்சி மாநாடு அறிக்கை வரை அனைத்தையும் முன்வைத்துப்பேச வேண்டும் என்பதை நிபந்தனையாகக் குறிப்பிட இருக்கின்றது.

அண்மைக்காலமாக சமஸ்டி ஆட்சிமுறை, தேசியம், சுயநிர்ணயம் என்பவை பற்றி வாயே திறப்பதில்லை என கூட்டமைப்பு விரதம் பூண்டிருக்கின்றது. தேர்தல் வரும்போது இவை வீரவசனங்களாக மேலெழலாம். தற்போது கூட்டமைப்பு ஒவ்வொன்றாக மரபு ரீதியாக பின்பற்றிய கொள்கைகளையெல்லாம் கழற்றி எறிந்து வருகின்றது. தேசியம், சுயநிர்ணயம், சமஸ்டி என ஒவ்வொன்றாகக் கழட்டி சிங்கக் கொடி வரை முன்னேறியிருக்கின்றது.

இவ்வளவிற்கும் அரசும் கூட்டமைப்பும் சேர்ந்து முதலில் ஒரு தீர்மானத்திற்கு வருதல் வேண்டும் பின்னர் அதனை தெரிவுக் குழுவில் முன்வைக்கலாம் என்றே கூறி வந்தது. இன்று அவற்றையெல்லாம் கைவிட்டு விட்டு இந்திய- அமெரிக்க எஜமான்களினது வேண்டுகோளின் பேரிலும், புதிய நண்பன் ரணிலின் வேண்டுகோளின் பேரிலும் தெரிவுக் குழுவிற்கு செல்வதற்கு கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

முதலில் வீரவசனம் பேசுவதும் பின்னர் அவற்றைக் கைவிட்டு சரணடைவதும் இதுதான் முதற் தடவையல்ல. ஜெனிவா மாநாட்டிற்கு செல்வதாக முன்னர் கூறிவிட்டு பின்னர் கைவிட்டமை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையினை நிராகரித்து 105 பக்க அறிக்கையினை வெளியிட்டுவிட்டு பின்னர் ஏற்றுக்கொண்டமை என இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

இவ்வாறு கூட்டமைப்பு நடந்து கொள்வதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள். ஒன்று கூட்டமைப்பிடம் இலக்கோ, கொள்கைகளோ இல்லாமை. இரண்டாவது ஜனநாயகமின்மை. தெளிவான இலக்கோ, கொள்கையோ இருந்திருந்தால் முன்னுக்குப் பின் முரணாக நடக்கும் நிலைமை ஏற்படாது.

அடுத்தது, கூட்டமைப்பு ஒரு ஜனநாயக ரீதியான அமைப்பல்ல. அங்கு கூட்டமைப்பில் இணைந்து கொண்ட கட்சிகள் கூடிக் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுப்பதில்லை. மக்கள் பங்கேற்பிக்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதில்லை. சம்பந்தனும், சுமந்திரனும் மட்டும் தமதுசொந்தக் குடும்பப் பிரச்சினைகள் போல தீர்மானங்களை எடுக்கின்றனர். குறைந்த பட்சம் தமிழரசுக் கட்சியின் செயற்குழுவுடன் கூட கலந்துரையாடப்படுவதில்லை.

தற்போது தெரிவுக்குழு விவகாரத்தில் மாவை சேனாதிராஜா கூட்டமைப்பின் கட்சிகளுடன் கலந்துரையாடியபின் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனக் கூறியிருக்கின்றார். இது எவ்வளவு தூரம் நடைமுறையில் பின்பற்றப்படும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தீர்மானங்களை எடுத்த பின் தகவல்களை மட்டும் ஏனைய கட்சிகளுக்கு தெரியப்படுத்தலாம்.

இலக்கு, கொள்கை என்பன உறுதியாக இல்லாமையும், ஜனநாயகமின்மையும் வெளிச்சக்திகள் கூட்டமைப்பினை கையாள்வதை இலகுவாக்கியிருந்தது. இந்திய - அமெரிக்க சக்திகளுக்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது கூட்டமைப்பினை கையாளத் தொடங்கியுள்ளார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். சிங்கக் கொடியேற்றம் அதற்கு மிகப் பெரிய சான்று.


இதைவிட இன்னோர் காரணமும் இருந்தது. அடுத்தகட்ட செயற்பாட்டிற்கு தயாரில்லாத நிலையே அதுவாகும். அரசியல் தீர்வு இல்லையென்றால் அடுத்த கட்டமாக மக்களை இணைத்த போராட்டங்களை நடாத்துவதற்கு முன்வர வேண்டும். கூட்டமைப்பிற்கு அதில் விருப்பமும் இல்லை. துணிவும் இல்லை.

சொகுசு வாழ்க்கைக்காக அவர்கள் அரசியலுக்குள் வந்தார்களே தவிர சிரமம் எடுத்து மக்களுக்கு பணி செய்யவோ, போராட்டம் நடத்தவோ அவர்கள் வரவில்லை. கூட்டமைப்பு தொடர்பாக மக்கள் அதிருப்தியுற்ற நேரங்களிலெல்லாம் மாவை சேனாதிராஜா போராட்டம் நடத்தப் போவதாக குரல் எழுப்புவார் அவ்வளவுதான். மக்கள் மத்தியில் ஒரு சிறிய கூட்டத்தைக் கூட்டுவதற்கோ அல்லது சமூக சேவைகளை செய்வதற்கோ கூட கட்டமைப்புக்கள் எதுவும் அதனிடம் இல்லை.

மேற்கூறிய பலவீனங்கள் கூட்டமைப்பிற்கென ஒரு நிகழ்ச்சி நிரலை இல்லாமல் செய்ததினால் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் தமதுநிகழ்ச்சி நிரல்களுக்குள் கூட்டமைப்பினை உள்வாங்குவதிலும் கடினம் எதுவும் இருக்கவில்லை.

கூட்டமைப்பு தெரிவுக் குழுவிற்கு செல்ல தாமதித்தமை அரசாங்கத்திற்கு பலத்த நெருக்கடிகளைக் கொடுத்திருந்தது. எப்படியாவது கூட்டமைப்பினை அங்கு கொண்டு வர விரும்பியது. ரவூப் ஹக்கீம், ரணில் விக்கிரமசிங்க எனப் பலர் இதற்கு முயன்றனர். இறுதியில் அமெரிக்கா, இந்தியா என்பனவும் தெரிவுக் குழுவிற்கு செல்லுங்கள் என அழுத்தங்களைக் கொடுக்க தொடங்கியுள்ளன. கூட்டமைப்பு விழுந்துவிட்டது.

அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பது நோக்கமல்ல. அவ்வாறான தீர்விற்கான அழுத்தங்களையும் கூட்டமைப்பு கொடுக்கவில்லை. அவர்களின் நோக்கம் சீனாவை இலங்கைத் தீவில் இருந்து அகற்றும் வகையில் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவது தான்.



தமிழ் ஊடகங்களின் பணி இது விடயத்தில் தமிழ் அரசியல் சக்திகளை சரியான பாதையில் கொண்டு வந்து நிறுத்துவது தான். மாறாக கூட்டமைப்பு போல நிகழ்வுகளுக்கு பின்னால் இழுபட்டுச் செல்வதல்ல. இங்கு பத்திரிகை தர்மத்தைக் கூட சில ஊடகங்கள் பேணுவதில்லை.

பல பக்க கருத்துக்களை தெரிவிக்க இடமளித்து விட்டு மக்கள் தீர்மானிக்க விடுவது தான் ஊடக அறமாக இருக்க வேண்டும். சில ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள் கட்சிப் பத்திரிகை போல அவற்றை நடாத்த முற்படுகின்றனர். கூட்டமைப்பினை பல வீனப்படுத்தக் கூடாது என்பதற்காக தாங்களாகவே மாற்றுக் கருத்துக்களை சுய தணிக்கை செய்கின்றனர். மாற்று அரசியல் இயக்கங்களின் அரசியல் நிகழ்ச்சிகளை இருட்டடிப்பு செய்கின்றனர்.

இவை தவிர கூட்டமைப்பிற்குள் இடம்பெற்ற உட்சண்டைகளும் கடந்த வாரத்தில் முக்கிய பேசு பொருளாகியிருக்கின்றன. சிங்கக் கொடி விவகாரம் கூட்டமைப்புக்குள் உட்சண்டையையும் பெரிதாக வளர்த்துள்ளது. கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் சம்பந்தனின் சிங்கக் கொடியேற்றத்தினை சம்பந்தனையும், சுமந்திரனையும் தவிர ஏனைய அனைவரும் கடுமையாக எதிர்த்திருந்தனர்.

இந்தச் சண்டை இரண்டு விடயங்களை பெரும் விவாதப் பொருளாக்கியிருந்தது. ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்து கொள்வது. இரண்டாவது முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு ஓர் உயர் சபையினை உருவாக்குவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்யும் விடயத்தில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மிகவும் உறுதியாக உள்ளன.அக்கட்சியினரைப் பொறுத்தவரை அவர்களது கட்சியில் அவர்களுக்கு இருப்பு இல்லை. கூட்டமைப்பில் தான் இருப்பு இருக்கின்றது. இதனால் எப்பாடுபட்டாவது கூட்டமைப்பினை பதிவு செய்யவே விரும்புகின்றனர். ஆனந்த சங்கரியின் வருகை அவர்களது கோரிக்கையையும் வலுவாக்கியுள்ளது.

ஆனால் தமிழரசுக் கட்சிக்காரர்கள் தமது கட்சி தொடர்பாக இன்னமும் மிதப்புச் சிந்தனையிலேயே இருக்கின்றனர். தங்களது கட்சியின் செல்வாக்கின் கீழ் தான் ஏனையவர்கள் வெற்றியடைகின்றனர் என நினைக்கின்றனர். தேர்தல்களில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் நிலை இருப்பது அவர்களது கர்வத்தை மேலும் உயர்த்தியுள்ளது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைபினை கட்சியாகப் பதிவு செய்வதினை கடுமையாக எதிர்க்கின்றனர்.

கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் வீட்டுச் சின்னம் கூட்டமைப்பின் சின்னமாக மாறிவிடும் அல்லது ஒரு புதிய பொதுச் சின்னம் தேர்ந்தெடுக்கப்படும். இந்தச் செயற்பாடுகள் எல்லாம்தம்மை கீழிறக்கும் என அவர்கள் நினைக்கின்றனர். மொத்தத்தில் முரண்பாட்டிற்கு கதிரை அரசியல் காரணமாக இருக்கின்றதே தவிர கொள்கைகள் எதுவும் இங்கில்லை.

சம்பந்தன் இது விடயத்தில் ஒருவாரகால அவகாசம் கேட்டிருக்கின்றார். ஒரு வாரத்திற்குள் முடிவு வராவிட்டால் ஏனைய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பதிவு செய்வதாகவும் தமிழரசுக் கட்சி பின்னர் அதில் இணைந்து கொள்ளலாம் என்றும் ஆனந்தசங்கரி கூறியிருக்கின்றார். ஆனாலும் சம்பந்தன்தான் கூட்டமைப்பின் தலைவர் என்றும் ஆனந்தசங்கரி கூறியிருக்கின்றார். தமிழரசுக் கட்சி சேராத நிலையில் சம்பந்தன் எந்தக் கட்சி சார்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பது என்பது ஆனந்தசங்கரிக்குத் தான் வெளிச்சம்.

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் சேராவிடின் ஆனந்தசங்கரி இயல்பாகவே கூட்டமைப்பின் தலைவராகி விடுவார். அவர் அந்த இலக்கினை நோக்கித்தான் செயற்படுவது போல தெரிகின்றது. அந்நிலை ஏற்பட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் வருங்காலத்தில் கூட்டமைப்பின் சின்னமாக மாறிவிடும். புலிகள் காலத்தில் துரோகியாக கருதப்பட்ட ஆனந்தசங்கரியும் தியாகியாக மாறிவிடுவார்.

ஆனந்தசங்கரியின் இந்தச் செயற்பாடுகளினால் தமிழ் மக்களுக்கு ஏதாவது பயன் கிட்டுமா? எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. இங்கு ஏற்படப் போவது ஆள்மாற்றமே தவிர கொள்கை மாற்றமல்ல. அதாவது சம்பந்தனின் இடத்திற்கு ஆனந்தசங்கரி வரப் போகின்றார். இருவரும் இந்தியாவின் சேவகர்களே! ஆனந்த சங்கரியின் அணியில் இருக்கும் கட்சிகளும் இந்தியாவிற்கு சேவகம் செய்யும் கட்சிகளே! சம்பந்தன் தலைமை அம்பலப்படுவதனால் மாற்று உபாயமாக இந்தியா இச் செயற்பாட்டினை முடுக்கி விட்டுள்ளது என்றும் செய்திகள் வருகின்றன.

மற்றையது முக்கிய விடயங்களைத் தீர்மானிப்பதற்கு ஒரு உயர் சபையினை உருவாக்குவது. சம்பந்தன் தனித்து தீர்மானம் எடுப்பதை தடுப்பதற்காகவே இது முன்மொழியப்பட்டது. இவ் இருதரப்பினருக்கும் கொள்கை வேறுபாடு எதுவும் கிடையாது. ஈகோ பிரச்சினைகள் மட்டுமே உண்டு. எனவே இவ்வாறான சபை ஒன்று உருவாக்கப்பட்டால் இனி வருங்காலங்களில் சம்பந்தன் எடுக்கும் தீர்மானத்தை இவர்கள் கூட்டாக எடுப்பர்.

இவர்கள் அனைவரும் இந்தியாவின் சேவகர்களாக இருப்பதனால் கூட்டுத் தீர்மானங்கள் எடுப்பதில் எந்தச் சங்கடங்களும் வரப்போவதில்லை.

தமிழ் மக்களின் தலையில் இந்தியாவும், அமெரிக்காவும் மட்டும் மிளகாய் அரைக்கவில்லை. ஆனந்தசங்கரியும் அரைக்கத் தொடங்கிவிட்டார்.

# மதகுருமார் நாடாளுமன்ற உறுப்பினராவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

மதகுருமார் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எந்தவொரு மதகுருவும் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடுவதனை தடுக்கக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை அரசியல் சாசனத்தில் இது தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளேன்.

19 ஆம் திருத்தச் சட்ட மூலம் என இதனை அழைக்க முடியும்.

மதங்களின் புனிதத் தன்மையையும் கௌரவத்தையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த சட்டத் திருத்தத்தை வலியுறுத்துகின்றேன்.

மதகுருமார் கட்சி அரசியலில் ஈடுபடுவ்து நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தடையாக அமையும் என்றார்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதனை தடுக்கும் வகையிலான முயற்சிகளை எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.



இவ்வாறான ஓர் சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டால் அதற்கு எதிராக போராடப் போவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

# வனக் குற்றங்களைத் தடுக்க தெற்காசிய வலையமைப்பு

(கொழும்பு)




தெற்காசிய வலய நாடுகளின் வனங்களில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு தகவல் வலையமைப்பொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசேட மாநாடு ஒன்று நாளை இலங்கையில் நடைபெறவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் எச்.டி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதில் எட்டு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் குறித்த நாடுகளுக்கிடையிலான பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளன.

இதன் மூலம் வனங்களை அண்மித்த பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க முடியும் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொள்ளையர் மீது துப்பாக்கிச் சூடு



(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய நகரில் வீடொன்றில் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சந்தேகநபர்கள் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுளளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இரண்டு கொள்ளையர்கள் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய - குட்டிகல பகுதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபரை அடையாளங் காண்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# இலங்கையர் நாடு கடத்தப்படுவதை பிரித்தானிய நீதிமன்றம் தடுத்தது



(கொழும்பு)

பிரிட்டனில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பலர் இலங்கைக்கு நேற்று முன்தினம் நாடு கடத்தப்படுவதை பிரித்தானிய நீதிமன்றமொன்று தற்காலிக தடையுத்தரவு மூலம் தடுத்து நிறுத்தியுள்ளது.

இலங்கைக்கு நாடு திரும்புபவர்கள் சித்திரவ்தை செய்யப்படுவதற்கு தன்னிடம் ஆதாரமுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்ததையடுத்து பிரித்தானிய நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட இலங்கையர்கள் விசேட விமானமொன்றின் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட இருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்நாடுகடத்தலை நிறுத்துமாறு பிரித்தானிய அதிகாரிகளை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியிருந்தது. பிரித்தானிய குடிவரவு அதிகாரிகளால் கட்டாயமாக நாடு கடத்தப்பட்ட தமிழர்களில் குறைந்தபட்சம் மூவர் சித்திரவதைக்குள்ளானமைக்கு தன்னிடம் ஆதாரம் உள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், நாடு கடத்தப்படவிருந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் பலரின் மேன்முறையீட்டையடுத்து அவர்களில் பலரை நாடு கடத்துவதை மறு அறிவித்தல் வரை நிறுத்துமாறு பிரித்தானிய உள்துறை திணைக்களத்தின் இராஜாங்க செயலாளருக்கு பிரித்தானிய மேல் நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.

நாடு திரும்புபவர்கள் முறையற்றவிதமாக நடத்தப்படுவதற்கு புதிய ஆதாரம் உள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் 29.05.2012 ஆம் திகதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதையே இந்த உத்தரவுக்கான காரணமாக மேற்படி நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு நாடு திரும்புவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்ற கருத்துக்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை. சுமார் 60 பேர் இவ்வாறான உத்தரவை பெற்றிருந்ததாகவும் ஏனையவர்கள் நாடு கடத்தப்படுவதை தடுப்பதற்கும் தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதாகவும் அவ்வட்டாரம் தெரிவித்தது.

# ரணிலின் கோரிக்கையை நிராகரித்தார் ஹிருனிகா




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஹிருனிகா பிரேமசந்திர நிராகரித்துள்ளார். கொலன்னாவ பிரதேசத்தின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் மகளான ஹிருனிகாவை ரணில் கோரியிருந்தார்.

எனினும், இந்தக் கோரிக்கையை ஹிருனிகா நிராகரித்துள்ளார். ஹிருனிகாவை தனது காரியாலயத்திற்கு அழைத்து ரணில் இது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தகவல் வழங்கினால் 10 இலட்சம் சன்மானம்




(கொழும்பு)

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் தொல்பொருட்கள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அல்லது திருடப்பட்ட பொருட்கள் தொடரபில் சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அவை தொடர்பிலான தகவல்களை 0112 32 81 38 அல்லது 0112 32 01 41 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வழங்க முடியுமென பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சில விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி இரவு தேசிய அருட்காட்சியகம் உடைக்கப்பட்டு, அங்கிருந்த தொல்பொருட்கள் சில இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பெரியகரிசலில் சூதாட்டம் அதிகரிப்பு

## தடுத்து நிறுத்துமாறு குடும்பப் பெண்கள் கோரிக்கை

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள பெரிய கரிசல் கிராமத்தில் கடந்த 18 வருடங்களுக்கும் மேலாக விளையாடப்பட்டுவருகின்ற சூதாட்டம் தற்போது தலைதூக்கி நிற்பதினால் இக்கிராமத்தில் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருவதாக பொது அமைப்பு மற்றும் பெண்கள் அமைப்புக்களுக்கு பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக பொது அமைப்பு மற்றும் பெண்கள் அமைப்பு தெரிவித்ததாவது,

பெரிய கரிசல் கிராமத்தில் கடந்த 18 வருடங்களுக்கும் மேலாக சூதாட்டம் விளையாடப்பட்டு வருகின்றது. தற்போது இக்கிராமத்தில் இந்த சூதாட்ட விளையாட்டு அதிகரித்துள்ளது.

பெரிய கரிசல் கிராமத்தில் தற்போது 250 முஸ்ஸிம் குடும்பங்களும் 10 தமிழ் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சுமார் 20 குடும்பத் தலைவர்கள் சூதாட்டத்திற்கு அடிமையாகியுள்ளதாக இக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

சூதாட்டத்தினால் இக்கிராம மக்கள் சீரழிந்து கொண்டு செலகின்றனர். சூதாட்டத்தில் ஈடுபடும் குடும்பத் தலைவர்கள் மனைவி, பிள்ளைகளின் தங்க நகைகளையும் வீட்டிலுள்ள பெறுமதியான பொருட்களையும் விற்பனை செய்தும் கடை, வீட்டு உறுதி ஆகியவற்றை அடகுவைத்தும் சூதாடுகின்றனர்.

இவர்கள் ஒரு நாளைக்கு பல இலட்சம் ரூபாவரை திரட்டி சூதாடுகின்றனர். இதனால் அவர்களின் குடும்பங்களில் பிரச்சினைகள் இடம்பெறுகின்றன. பிள்ளைகளும் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவதுடன், கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன.

சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற குடும்பத்தலைவர்கள் சமூகத்தில் தலைதூக்கி நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சூதாட்டத்தை நிறுத்த இக்கிராம மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தபோதிலும், எந்தவித பலனும் கிடைக்கவில்லை. இது பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்தி குடும்பங்களின் நலனையும் குறிப்பாக பெண்கள், சிறுவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்றுத்தருமாறு இக்கிராம மக்கள் தங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்றனர்.

# அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்காலத்தில் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை மின்னல் தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கு தேசிய சபை ஒன்றை எதிர்வரும் சில தினங்களில் அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# சர்வதேசம் தொடர்பாக இலங்கையின் அணுகுமுறை குறித்து...!

சர்வதேச மன்னிப்புச் சபையும் அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல் குறித்து ஏக காலத்தில் தமது கண்டனங்களை வெளியிட்டிருக்கின்றன.

நல்லிணக்க ஆணைக்குழு முன் வைத்த பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது பற்றி வெளிப்படையாக அறிவித்தல் எதனையும் உள்நாட்டில் அரசு வெளியிடாத நிலையில் சர்வதேசத்தின் இக் கண்டனங்கள் மீண்டும் வெளிப்பட்டிருக்கின்றன.


உண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சாத்தியமானவற்றை எவ்வாறு கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்த அரசு விரும்புகிறது என்பதை முதலில் வெளிப்படையாக அனைத்துக் கட்சிகளையும் கூடி ஆராய்ந்து அது பற்றிய அறிவிப்பை முதலில் நாட்டு மக்களுக்கு அரசு வெளியிட்டிருக்கலாம்.

அவ்வாறு செய்யப்பட்டிருக்குமாயின் அனைத்து அரசியல் கட்சிகளதும் அபிப்பிராயங்களை உள்வாங்கி நடைமுறைக்கு சாத்தியமானதும் இலகுவாக செயற்படுத்தக் கூடியதுமான செயற்திட்டமொன்றை அரசு இனங்காண்பது சாத்தியமாகியிருக்கும்.

அதுமட்டுமன்றி அந்த திட்ட வரைபை நாட்டு மக்களின் ஏகமனதான விருப்பத்தை பிரதிபலிக்கும் ஒனறாகவும் அரசு சர்வதேசத்துக்கு காண்பித்திருக்கலாம்.

ஆனால் நடைமுறைப்படுத்தவுள்ள இப் பரிந்துரைகள் குறித்து உள்நாட்டில் எந்த அறிவிப்பையும் வெளியிடாத நிலையில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் கிலாரி கிளிண்டனிடம் அமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்த அறிக்கைக்கு பதிலடியாக அமைச்சர் பீரிஸ் என்ன கூறினாலும் அதை நம்பப் போவதில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூறியிருப்பது அமெரிக்காவின் இலங்கை மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட இந்த



அறிவிப்புக்குப் பிறகு இலங்கையில் இடம்பெற்ற உரிமை மீறல் சம்பவங்களை கண்டித்து கிலாரி கிளிண்டன் வெளியிட்ட 400 பக்க கண்டன அறிக்கையும் இதுவரை வெளியான அறிவிப்புகளில் இருந்து சற்று வித்தியாசமானதும் வலுவானதுமான ஒரு அறிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

இலங்கை விவகாரத்தை குறிப்பிடும்போது இதுவரை காலமும் சர்வதேச அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிக்கையை மேற்கோள் காட்டியே அமெரிக்கா கண்டனங்களை வெளியிட்டு வந்திருக்கிறது.

ஆனால் இம்முறை இலங்கையில் உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதை அமெரிக்கா உறுதிப்படுத்துவதாகவே கிலாரி கிளிண்டனின் அறிக்கை அமைந்திருந்ததுடன் இந்த உரிமை மீறல்களில் அரசுத் தரப்பு சம்பந்தப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் இலங்கை விஜயத்தை அரசு விரும்பாத நிலையில் தனது விஜயத்துக்கு முன்னதாக உண்மைகளைக் கண்டறியும் அதிகாரிகளின் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்க மேண்டுமென நவநீதம் பிள்ளை கூறியிருப்பது இலங்கைக்கு மேலுமொரு தன்மானப் பிரச்சினையை கிளறி விடும் செயலாகும்.

இவ்வாறு உள்நாட்டில் சக கட்சிகளுக்கோ பொதுமக்களுக்கோ அறிவிக்காது அமெரிக்காவுடன் விடயங்களை அணுகுவதும் பதிலுக்கு அமெரிக்கா இலங்கைக்கெதிரான

**- சாலையூரான் -**

கண்டனங்களை பகிரங்கமாக வெளியிடுவதும் இலங்கையின் சர்வதேசம் நோக்கிய இராஜதந்திர நிகழ்வுகளை கேலிக்குள்ளாக்கும் செயல்களாகும்.

பிந்தியதாக தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் தம்பர அமில தேரர் இலங்கை மீது சர்வதேச தலையீடுகள் அதிகரிப்பதற்கு அரசின் பொறுப்பற்ற தன்மையே காரணம் என்றும் வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களினதோ அல்லது சிங்கள மக்களினதோ என்கிற பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வி கண்டிருப்பதாயும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.


எவ்வாறிருப்பினும் நீண்ட அவதானிப்பில் புலிகளுக்கெதிரான அரசின் வெற்றியை சர்வதேசத்துடன் இணைந்த அரசியல் வெற்றியாக மாற்றியமைப்பதில் இலங்கை தோல்வி கண்டிருக்கின்றது என்றே கூறவேண்டியுள்ளது.

இதன் பாதிப்புகள் எதிர்காலத்தில் எவ்வாறான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்பதை இங்கே விபரிப்பதை விட உரிமை மீறல் சம்பவங்களை தொடர்பு படுத்தி நாட்டுக்கு ஏற்பட்டுள்ள களங்கங்களை நீக்குவதற்கு வெளிப்படையானதும் உண்மையானதுமான திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு முயற்சிப்பதே இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும்.

## அமெரிக்க வெள்ளைத் திமிர் வழங்கிய ஒரு தீர்ப்பு!

1857ஆம் ஆண்டு அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிப்பது சம்பந்தமான ஒரு பிரபல்யமான வழக்கு நடைபெற்றது. அன்றைய காலகட்டத்தில், அமெரிக்க முதலாளிகளால் ஆபிரிக்காவிலிருந்து மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்கிவரப்பட்ட இலட்சக்கணக்கான கறுப்பு இன மக்கள், அடிமை நிலையில் மிகவும் மோசமான வாழ்க்கை நிலைமைகளில், அமெரிக்கா எங்குமிருந்த பண்ணைகளில் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த நிலைமையை மாற்றக் கோரி, ஒரு கறுப்பின அடிமை அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தான். அவன் அந்த மனுவில், "அடிமை முறை இல்லாத ஒரு நாட்டில் நான் வாழ்ந்து வருகின்றேன். ஆகவே சட்டத்தைப் பொறுத்த வரையிலும் என்னுடைய அடிமை அந்தஸ்தை சட்டபூர்வமாகச் செல்லாது என அறிவிக்க வேண்டும்" எனக் கோரியிருந்தான்.



இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்த அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஜர் புரூக்ஸ் டேனி, "ஒரு வெள்ளையர் மதித்து நடந்து கொள்ளத்தக்க எந்தவோர் உரிமையும் கறுப்பனுக்குக் கிடையாது" என வெள்ளைத் திமிருடன் கூறினார்!

அவப்பெயர் பெற்ற "டிரட் ஸ்காட் கருத்துரை" என வர்ணிக்கப்படும் இந்தத் தீர்ப்பின் போது, தலைமை நீதிபதி டேனியும் மற்றும் பெரும்பான்மையான நீதிபதிகளும் பின்வருமாறு கூறியிருக்கின்றனர்:

"சுதந்திரப் பிரகடனமும், 'அரசியலமைப்புச் சட்டமும் வரையப்பட்ட போது, ஆபிரிக்க - அமெரிக்கர்கள் ஐந்தில் மூன்று பங்கு மனிதப் பண்பை மட்டுமே கொண்டவர்கள் என்றே கருதப்பட்டார்கள். "மக்களாகிய நாம்" என்று நாங்கள் கூறும்போது, நிச்சயமாக அது உங்களை (அடிமைகள்) குறிப்பதல்ல. ஆகவே, "மக்களாகிய எங்களுக்கு" உரிய உரிமைகளையும், சொத்துரிமைகளையும் உங்களுக்குத் தர முடியாது. உங்களுக்கோ, உங்கள் வாரிசுகளுக்கோ, உங்களுடைய சந்ததியினருக்கோ அரசியலமைப்புச் சட்டம் பொருந்தாது. என்றைக்கும் உங்கள் வாரிசுகள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியாது."

எவ்வளவு வெள்ளைத் திமிருடன் கூடிய தீர்ப்புப் பாருங்கள்! மனித குலப் பிறப்பின் கருவறை எனக் கருதப்படும் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புராதன நாகரீகம் உள்ள ஒரு மக்களைப் பார்த்து, சுமார் 500 ஆண்டு வரலாற்றை மட்டுமே கொண்ட ஒரு நாட்டின் நீதிபதிகள் - அதுவும் அந்நாட்டின் பூர்வ குடிகளான செவ்விந்திய இன மக்களை அழித்து உருவாக்கிய நாட்டின் வெள்ளை நீதிபதிகள் - கூறியிருக்கும் நிறவெறி பிடித்த தீர்ப்பு எப்படியென்று பாருங்கள்!!

ஆனால் இன்று வரலாறு மாறிவிட்டது. அமெரிக்காவில் இன்று கறுப்பினக் கலப்புக் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக இருக்கின்றார். இருப்பினும் நிறவெறி முற்றிலுமாக மறைந்து விடவில்லை. அது நீறுபூத்த நெருப்பாக அங்கு இன்னமும் கனன்று கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமின்றி, அமெரிக்கப் பெரு முதலாளிகளின் ஈவிரக்கமற்ற சுரண்டலினாலும், ஒடுக்குமுறையினாலும் கறுப்பின மக்கள் மட்டுமின்றி, அங்குள்ள வெள்ளையின மக்களும் அல்லல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். அதன் வெளிப்பாட்டைத்தான் "வோல் ஸ்றீற்றை கைப்பற்றும் போராட்டங்கள்" சமீபத்தில் எடுத்துக் காட்டின.

*- நன்றி: வானவில்*

## அட, அப்படியா!

அமெரிக்காவில் இந்தியர்களின் பங்களிப்பு இல்லையென்றால் அமெரிக்காவே ஆட்டம் கண்டுவிடும் நிலை உள்ளதாக அமெரிக்க சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. அது குறிப்பிட்டிருக்கும் புள்ளிவிபரம் வருமாறு:

அமெரிக்காவில், 25 லட்சம் இந்தியர் வசிக்கின்றனர். அங்குள்ள ஒவ்வொரு துறையிலும் இந்தியர்களின் பங்கு கணிசமானது.

அமெரிக்காவில் உள்ள டாக்டர்களில், 38 சதவீதம் பேர் இந்தியர்.



அங்கு உள்ள விஞ்ஞானிகளில், 12 சதவீதத்தினர் இந்தியர். அமெரிக்க பாதுகாப்பு மற்றும் அணுசக்தித்துறை (நாசா) ஊழியர்களில், 36 சதவீதம் இந்தியர்.

கம்ப்யூட்டர் சொப்ட்வேர் துறையின் ஜாம்பவான் நிறுவனமான அமெரிக்காவின், "மைக்ரோசொப்ட்" நிறுவன ஊழியர்களில், 34 சதவீதத்தினர் இந்தியர்.

ஐ.பி.எம்., கம்ப்யூட்டர் நிறுவன ஊழியர்களில், 28 சதவீதத்தினர் இந்தியர்.

இன்டெல் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் ஊழியர்களில், 17 சதவீதத்தினர் இந்தியர்.

ஜெரக்ஸ் நிறுவன ஊழியர்களில், 13 சதவீதத்தினர் இந்தியர்.

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களில், 23 சதவீதத்தினர், "கிரீன் கார்ட்" குடியுரிமை பெற்றவர்கள்.

இந்தியர்களின் ஒத்துழைப்பு மட்டும் பரிபூரணமாக கிடைக்காவிட்டால், அமெரிக்காவின், "சூப்பர் பவர்" அந்தஸ்து ஆட்டம் கண்டு விடும்.

## அவசரத்தில் வந்த "மே"



"மே" பாட்டு

இது. சிவாஜி நடித்த "அவன்தான் மனிதன்" படத்தில் வரும் "அன்பு நடமாடும் கலைக்கூடமே" பாடல் - தொடக்கம் முதல் முடிவு வரை ஒவ்வொரு வரியும் "மே" வில் தான் முடியும். காரணம் கண்ணதாசனின் எரிச்சல்.

"அவன்தான் மனிதன்" படத்தில் இரண்டு அல்லது மூன்று பாடல்கள், சில காட்சிகள் மலேசியாவில் படமாக்கப்பட இருந்தது. மலேசியாவில், குறிப்பாக மே - மாதத்தில் படமாக்க வேண்டும் என்பது இயக்குனரின் திட்டம். காரணம்.... மலேசியாவில் பிரபல மலர் கண்காட்சி அப்போதுதான் தொடங்கும். அதற்கான அவசரத்தில் இருந்தன படபிடிப்புக் குழுவினர்.

பாடல்களுக்கான டியூன்-களும் தயார். படபிடிப்புக் குழுவினருக்கான வீசா, பாஸ் போர்ட்களும் ரெடி. சிவாஜி, மஞ்சுளா கால்ஷீட்களும் கிடைத்துவிட்டன. பாடல் மட்டும் தயாராகவில்லை. கண்ணதாசன் எழுதிக் கொடுக்கவில்லை. பலமுறை கேட்ட போதும் "அப்புறம் தருகிறேன்" என்பதே அவரது பதிலாக இருந்திருக்கிறது.

மலேசியா செல்வதற்கு இரண்டு நாட்கள் மட்டுமே பாக்கி என்ற நிலையில், கண்ணதாசனிடம் பேசிய எம்.எஸ்.வீ "மே மாதம் படபிடிப்பு நடத்த வேண்டும். பாடல் எழுதித் தருகிறாயா, இல்லை வேறு யாரிடமாவது எழுதி வாங்கிக் கொள்ளட்டுமா?" என்று கேட்டிருக்கிறார். கடுப்பான கண்ணதாசன் "என்னையா.... சும்மா "மே..மே.."னு கத்திட்டிருக்கீங்க?" என்றபடியே ஐந்து நிமிடத்தில் இந்தப் பாட்டை எழுதிக் கொடுத்தாராம்.

# பொன்சேகா மான்மியம்!

– டி.பி.எஸ்.ஜெயராஜ்.

சரத் பொன்சேகா மற்றும் கோட்டாபய இடையேயான உறுத்தல்கள் பாதுகாப்பு நிறுவனங்களுக்குள் மட்டும் மட்டுப் படுத்தப்படவில்லை. ஊடக நேர்காணல்களில் சரத் பொன்சேகா எதிர்மாறான வீழ்ச்சி ஏற்படத்தக்க பெரிய பெரிய அதிரடிகளை வீசி வந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை கோமாளிகள் என்றும் எல்.ரீ.ரீ.ஈயின் சம்பளத்தில் வேலை செய்பவர்களென்றும் குறிப்பிட்டிருந்தார். இதற்கு ஆட்சேபணை தெரிவித்த புதுதில்லி, அதற்காக பொன்சேகாவை மன்னிப்பு கோரும்படி கேட்டுக்கொண்டது. அவர் அதற்கு மறுத்துவிட்டார். அதை சரி செய்யும் பொறுப்பு கோட்டாபயவிடம் விடப்பட்டது, தான் செய்யாத தவறுக்காக அவர் மன்னிப்புக்கோரி அதற்கு ஒட்டுப்போட்டு சரிப்படுத்தினார்.

அதன்பிறகு கனடிய பத்திரிகையான நஷனல் போஸ்ட்டுக்கு வழங்கிய ஒரு நேர்காணல், அதில் பொன்சேகா இலங்கை பெரும்பான்மையான சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது, சிறுபான்மையினர் இங்கு வாழலாம், ஆனால் எதனையும் கேட்கக்கூடாது என்று கூறியிருந்தார். அந்த பாதிப்பை நிவர்த்தி செய்வதற்காக அரச கட்டுப்பாட்டிலுள்ள தினசரி ஒன்றிற்கு நேர்காணல் ஒன்று வழங்கும்படி அவரிடம் கேட்கப்பட்டது. அதில் அவர் இன்னும் மோசமான முறையில் சிறுபான்மை சமூகங்கள் தகாத கோரிக்கைகளை அதாவது பெடரலிசம் போன்றவற்றை முன்வைக்க கூடாது என்று கூறியிருந்தார்...

போர் நடந்து கொண்டிருக்கும் போது யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தும் தனது தைரியத்தைப் பற்றி சரத் பொன்சேகா தொடர்ச்சியாக பெருமை பேசி வந்தார். அவர் தன்னை தற்கால துட்ட கைமுனுவைப் போலவே பார்த்தார், ஒரு கட்டத்தில் கைமுனு யானை மேல் அமர்ந்திருப்பதைப் போலவும், அவருக்கு முன்னால் அச்சமடைந்த எல்லாளன் முழங்காலில் நின்று இறைஞ்சுவது போலவும் ஒரு படம் வெளியாகியிருந்தது. இந்த சித்திரத்தைக் கண்ட ஒரு வெளிநாட்டு ஊடகவியலாளர், அதிலுள்ள கைமுனுவின் முகம் சரத்தின் சாயலில் இருப்பதாகத் தெரிவித்தார்...



இவருக்குத்தான் தமிழ் மக்களை வாக்குப் போடச் சொன்னார்கள்.

யுத்த வெற்றி காரணமாக அடைந்த பிரபலத்தை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிருப்பதையிட்டு சரத் பொன்சேகா அளவற்ற சினமுற்றிருந்தார். உதாரணத்துக்கு ஸ்ரீ.ல.சு.க மாநாட்டுடன் இணைத்து வெளியிடுவதற்காக சம்பூரின் வீழ்ச்சியை அறிவிப்பதற்கு தாமதப்படுத்தியதையிட்டு சரத் எரிச்சல் அடைந்தார். அரசியலையும் மற்றும் அரசியல்வாதிகளையும் பற்றி பொன்சேகா பகிரங்கமாகவே விமர்சிப்பதுடன் அவர்களை ஏளனம் செய்யும் வகையில் குறிப்பிடுவார். இது வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணத்தினால் பெறப்பட்ட யுத்த வெற்றிக்காக ஜனாதிபதி ராஜபக்ஸ போற்றப்படுவதினால் பொன்சேகா அடைந்த சினத்தின் காரணமாக வெளிப்பட்டது.

அந்தச் சமயத்தில் வெளிநாட்டிலிருந்த ஜனாதிபதிக்கு மே, 16 ஆம் திகதி பிரபாகரன் மரணமடைந்து விட்டதாக தவறாக அறிவிக்கப்பட்டது. இதனால் மகிழ்ச்சியில் திளைத்த ஜனாதிபதி ராஜபக்ஸ 17 ஆம் திகதி நாடு திரும்பியபோது தனது தேசப்பற்றைக் காண்பிப்பதற்காக மண்டியிட்டு நிலத்தை முத்தமிட்டார்.

பின்னர் அவர் பிரபாகரன் இன்னும் கொல்லப்படவில்லை, ஆனால் சுற்றிவளைக்கப்பட்டு விரைவில் முடிவடையும் நிலையில் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டார். மே 19 ஆம் திகதி காலை புலிகளின் தலைவரின் மரணத்தை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்காக ஜனாதிபதியின் ஒரு சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஆனால் மகிந்தவின் பெறுப்பாளரான பொன்சேகா மரணத்தை உறுதிப்படுத்த மறுத்துவிட்டதால் ஜனாதிபதி எதிர்பார்த்திருந்த அறிவிப்பை வெளியிடமுடியவில்லை. ஆனால் ஜனாதிபதியின் உரை முடிவடைந்த பின்னர், இராணுவத் தலைவர், பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக நாட்டு மக்களுக்கு அறிவித்தார். மகிந்த ராஜபக்ஸ அல்ல சரத் பொன்சேகாவே வரலாற்று புகழ் மிக்க அறிவிப்பை வெளியிட்டவர்...

மற்றொரு விரிசலாக வளருவது வன்னி இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றும் திட்டம். ஐநா, சர்வதேச நாணய நிதியம், மேற்கு நாடுகள், மற்றும் இந்தியா என்பனவற்றுக்கு ஜனாதிபதி ராஜபக்ஸ, இது பற்றி உறுதியளித்திருப்பதுடன், இந்த உத்தரவாதங்களை கூறி சர்வதேச நாணய நிதியத்திடம் கடனும் பெற்றிருந்தார்.

ஆனால் பருந்து குணம் கொண்ட பொன்சேகா வித்தியாசமான எண்ணத்தை கொண்டிருந்தார். பொதுமக்கள் என்ற போர்வையில் மறைந்திருக்கும் கடும்போக்கான புலிகளை அடையாளம் காண்பதற்காக இந்த உள்ளக இடம்பெயர்ந்தோரின் தடுப்புக்காவலை அவர் நீட்டிக்க விரும்பினார்.

இராணுவத்தின் பலத்தை 300,000 ஆக அதிகரித்து அதில் ஆகக் குறைந்தது 100,000 பேர்களை வன்னியில் பயன்படுத்த பொன்சேகா விரும்பினார். இராணுவத்தாரின் குடும்பங்களை வன்னிப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் குடியேற்றி அதன்மூலமாக வடக்கின் குடிசனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களையும் அவர் தீட்டியிருந்தார். பொன்சேகா ஒரு நேர்காணலில் தனது குழந்தை பருவத்தில் அம்பாறை மாவட்டத்தில் குடியிருந்தபோது தமிழர்களினால் தாக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவரைப் பொறுத்தமட்டில் யுத்தம் இன்னும் முடிவடையவில்லை.

## பத்திரிகைச் செய்தி

**சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட இராணுவத்தினர் தொடர்பான காணொளி குறித்து பீபீசி சிங்கள சேவையான சந்தேஷியவுக்கு கருத்து தெரிவித்த சரத் பொன்சேகா, தான் அவற்றை பார்க்கவில்லை எனவும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

**குறிப்பாக கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி சந்தேக நபர்கள் கை கட்டப்பட்டு சுடப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, அந்த காட்சி இராணுவ சிப்பாய்கள் மீது புலிகள் மேற்கொள்ளும் துப்பாக்கிச்சூடு என கூறியுள்ளார்.**

**"காரணம் எனது சிப்பாய்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர். அவர்களை பிடித்துச் சென்றது புலித்தீவிரவாதிகள்தான்" என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

**"எனவே இவ்வாறான விடயங்கள் குறித்து சாதாரண விசாரணை நடத்தப்பட வேண்டும். நேரடியாக இராணுவத்தினரை நோக்கி விரல் நீட்டுவது நியாயமானதல்ல" என சிறையில் இருந்து ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பீபீசி சிங்கள சேவையான சந்தேசியவுக்குத் தெரிவித்தார்.**


---

**ராசாத்தி உன்னை காணாத நெஞ்சு...**
**ராஜா மகள் ரோஜா இவள்...**
**கொடியிலே மல்லிகைப் பூ...**
**மாஞ்சோலைக் கிளிதானோ...**
**கத்தாழ காட்டு வழி...**

என்று பின்னணிப் பாடகராக தனக்கென்று ஒரு முத்திரை பதித்தவர் "ஜெயச்சந்திரன்". சமீபத்தில் அவர் 67ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். அவரைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான செய்தி.


ஏ.ஆர்.ரஹ்மான் முதன் முதலில் மெட்டமைத்த "வெள்ளித்தேன் கிண்ணம் போல்" என்ற பாடலைப் பாடிய பெருமையும் கொண்டவர் ஜெயச்சந்திரன்.

ரஹ்மானின் தந்தை ஆர்.கே.சேகர் அவர்கள் 1975ஆம் ஆண்டு இசையமைத்த penpada என்னும் படத்தில் மொத்தம் நான்கு பாடல்கள். அவற்றுள் மூன்று பாடல்கள் முடிந்த நிலையில், ரஹ்மான் தற்செயலாக ஒரு சிறு மெட்டமைக்க, இவர் போட்ட மெட்டு பிடித்து விடவே அதனையே அந்தப் பாடலுக்குப் பொருத்திவிட்டனர். இதுவே ரஹ்மான் மெட்டமைத்து ஜெயச்சந்திரன் குரலில் 1975ஆம் வருடம் அரங்கேறிய பாடல்.



---

சின்னத்தம்பி பெரியதம்பி படத்தில் இடம்பெற்ற "ஒரு காதல் என்பது" என்ற பாடல் இளையராஜா இசையமைப்பில் கவிஞர் வைரமுத்துவின் வரிகளில் வேறு ஒரு படத்திற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருந்த பாடல். அந்தப் பாடலை எடுத்து இந்தப் படத்தில் தன் பெயரில் பயன்படுத்திக் கொண்டார் கங்கைஅமரன்.



---




ரஜினியின் "தம்பிக்கு எந்த ஊரு" படத்திற்கு முதலில் வைத்த பெயர் "நானே ராஜா... நீயே ராணி". இந்தப் பெயர் பிடிக்கவில்லை என்று படக்குழுவினர் பலரும் சொல்லியதால் "தம்பிக்கு எந்த ஊரு" என்று பெயரை மாற்றி இருக்கிறார்கள்.

ஆனால் படத்தின் இசைதட்டுக்களில் "நானே ராஜா...நீயே ராணி" என்றுதான் இருக்கிறது. இதோ அந்த இசைத்தட்டு.

---

## ∴பேஸ்புக் கைத்தொலைபேசி தயாரிக்கிறது!




∴பேஸ்புக் சமூக இணையத்தளம் அடுத்த ஆண்டில் தனது நிறுவனத்தினால் கையடக்க தொலைபேசியை தயாரிக்க திட்டமிட்டுள்ளது. இதற்காக பல மென்பொருள் மற்றும் வன்பொருள் பொறியியலாளர்களை அது பணியில் அமர்த்தி இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. தமது கையடக்க தொலை பேசி பாவனையாளர்களை கவரும் வகையிலேயே ∴பேஸ்புக் இந்த புதிய முயற்சியை மேற்கொண்டிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ∴பேஸ்புக் தமக்கான் கையடக்கத் தொலைபேசியை விரைவில் தயாரிக்காவிட்டால் ஏனைய கையடக்கத் தொலைபேசிகளிடம் தங்கியிருக்க வேண்டி வரும் என அதன் நிறுவனர் மார்க் சுகர்பி அச்சப்படுவதாக பேஸ்புக் ஊழியர் ஒருவரை மேற்கொள் காட்டி நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# குருநகர் மக்களுக்கு மின்சாரம், நீர் விநியோகம்; அமைச்சர் டக்ளஸ் உடனடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குருநகர் 5 மாடிக்கருகில் வாழும் குடும்பங்களுக்கு மின்சாரம் மற்றும் நீர் விநியோகத் திட்டத்தை வழங்குவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த குருநகர் தொடர்மாடி இறால் வளர்ப்புத் திட்டத்திற்கருகில் வாழும் 13 குடும்பங்களின் பிரதிநிதிகள் அமைச்சர் அவர்களைச் சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது மின்சாரம், நீர் விநியோகம் மற்றும் மலசல கூடம், காணி உரிமம் இல்லாததால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக காட்டினர்.

கோரிக்கைகளை ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள் அம்மக்களுக்கு நீர் விநியோகம் மின்சார விநியோகம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

இதேவேளை அரியாலைப் பகுதியைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்து தமக்கு காணிகளுக்கான உரிமங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கோரிக்கையினை முன்வைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் தாம் ஆராய்ந்து கொண்டதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனத்தெரிவித்தார்.

# இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் மீண்டும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பை 125 ரூபாவாக நிலைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி உத்தரவாதம் வழங்கிய போதும், இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது.

குறிப்பிட்ட தினம் ஒன்றில் அந்நியச் செலாவணி வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்ட போது அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு 131.55 ரூபாவாக இருந்தது.

பின்னர் இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்து அமெரிக்க டொலருக்கு எதிரான நாணய மதிப்பு 134.55 ரூபா என்ற உச்ச அளவைத் தொட்டது.

இலங்கை மத்திய வங்கி அமெரிக்க டொலருக்கு எதிரான நாணய மதிப்பை 132 ரூபாவாக நிலை நிறுத்தவுள்ளதாக தவறான செய்தி பரப்பப்பட்டதாலேயே ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததாக இலங்கை மத்திய வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பை 125 ரூபாவாக நிலைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி கூறியிருந்தது. ஆனாலும் இலங்கை அரசினால் ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# பங்குச் சந்தை சரிவிற்கு அரசாங்கமே பொறுப்பு

(கொழும்பு)

நாட்டின் பங்குச் சந்தையில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் சரிவிற்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டுமென ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு பலூனைப் போன்று பங்குச் சந்தையை அரசாங்கம் ஊதிப் பெருப்பித்தது என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

உலக வங்கியும், திறைசேரியும் நாட்டின் பொருளாதாரம் வலுவானது என பிரசாரம் செய்தன. 8 வீத பொருளாதார வளர்ச்சி, உலகின் வேகமான பங்குச் சந்தை வளர்ச்சி எனப் பிரசாரம் செய்யப்பட்டது.

எனினும், தற்போது பங்குச் சந்தை மிக வேகமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது. உற்பத்தி எதுவும் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் ஓர் முறைமையாக பங்குச் சந்தை நடவடிக்கைகளை ஜே.வி.பி நோக்குகின்றது என சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

# கிராமத்திற்கு ஒரு வீடு வவுனியாவில் ஆரம்பித்து வைப்பு



(வவுனியா)

நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சும் தேசிய வீடமைப்பு அதிகார சபையும் இணைந்து மேற்கொள்ளும் கிராமத்திற்கு ஒரு வீடு திட்டம் கடந்த புதன்கிழமை வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீடமைப்பு மற்றும் தேசிய வீடமைப்பு குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையினூடாக 14660 வீடுகளை தேசிய ரீதியில் அமைக்கவுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 102 கிராம சேவகர் பிரிவிலும் தலா ஒரு வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் பயனாளிகளுக்கு 11 வீத வட்டியுடன் இரண்டு இலட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளதுடன் ஆரம்ப நிகழ்வன்று பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 40 ஆயிரம் ரூபா காசோலையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் ஏ.சிவபாதசுந்தரன், ஜனாதிபதி இணைப்பாளர் சிவநாதன் கிசோர், முன்னாள் பிரதி அமைச்சர் சுமதிபாலா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின வவுனியா முகாமையாளர் வி.கணேசநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# புகைபிடிக்கும் பழக்கத்தை விடுத்து ஆரோக்கியம் பெற்றவர்களாக மாற வேண்டும்

## –டாக்டர் அ.பிறிற்ரோ டக்ளஸ்

இன்றைய அவசரமான உலகில் அறிவுரைகளை அதிகமாக விரும்பாத தலைமுறையாக இளைஞர்கள் உள்ளனர். இவர்கள் நல்லவற்றையோ, தீயவற்றையோ மிகவும் இலகுவாக கற்றுக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள் என டாக்டர் அ.பிறிற்ரோ டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவ் இள வயதினர் புகை பிடிக்கப் பழக்கப்படுகின்றதை காணும் போது அதனை ஒழுக்கக் கேடான விடயமாக பார்ப்பது மட்டுமல்லாது உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் விடயமாகவும் பார்க்க வேண்டியுள்ளது.

புகை பிடித்தலுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்ற போதும புகைப் பொருளில் காணப்படும் நிக்கொட்டின் எனும் போதையை உண்டுபண்ணும் இராசாயனப் பொருளுக்கு அடிமையாவதே முக்கியமாக தெரியவருகின்றது.

புகை பிடிக்கின்ற போது உளளெடுக்கப்படும் புகையிலுள்ள நிக்கொட்டின் சிலருக்கு ஆரம்பத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாவிடினும், சிலரின் அதிகப்படியான மாற்றங்களையும் ஏற்படுத்தி விடுவதுமாகவுள்ளது.

எனவே எல்லோருடைய மூளையிலும் ஒரே விதமான மாற்றங்களை ஏற்படுத்துவது இல்லை. இதனால் முதன் முறையாக புகைக்க முயற்சி செய்பவர் தனக்கு ஏற்படும் கிளர்ச்சி காரணமாக புகை பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி விடுகின்றார்.

மேலும் இள வயதில் புகைத்தலை விளையாட்டாக கூட முயற்சிக்கக் கூடாது என்பதற்கான முக்கிய காரணமாக இதனைக் கொள்ளலாம்.

இவ்வாறாக தளர்வான இன்பம் கிடைக்கின்ற போது மூளை மீண்டும் மீண்டும் அந்த இன்ப நிலையினை எதிர்பார்க்க ஆரம்பித்துவிடுகின்றது.

நமது செயற்பாடுகளின் பின்னணியில் இருக்கும் மூளையின் நேரடிக்கட்டளைகள் அந்த இன்ப சுகத்தை மனக்கணக்கில் நிகழ் த்திக் காட்டி புலனுக்கு அடிமை யாக்கி விடுகிறது. இதனால் அந்த அடிமை நிலையிலிருந்து மீள முடியாது தவிக்கின்றனர்.

அத்தோடு வாய் துர்நாற்றம், குடற்புண், ஆண்மைக் குறைபாடு. அவலட்சணத் தோற்றம், காசநோய், புற்றுநோய் போன்ற ஏராளமான நோய்களை ஏற்படுத்தி சமூகத்தை அழிவின் பாதைக்கு கொண்டு செல்வதில் புகைப்பழக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

எந்தவொரு விடயத்தையும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், அதனை நாம் சிந்தித்து உணரவேண்டும். அந்த அடிப்படையில் இந்த தீய பழக்கமாகிய புகை பிடித்தலையும் நாம் சிந்தித்துப் பார்த்தோமாகையால் அதை விட்டும், தவிர்த்தும் வாழக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

புகை பிடித்தல், புகை பிடிப்பவரை மட்டுமல்லாமல் சமூகத்தையும் பாதித்துவிடுகிறது. புகை பிடிப்பவர்களை சூழ உள்ள புகைப் பழக்கமில்லாத உறவினர்கள் சிறிது சிறிதாக பாதிப்படைகின்றனர். காலப் போக்கில் இவர்களுக்கும் புகை பிடிப்பவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் வந்து மரணமடையும் சந்தர்ப்பத்திற்கு தள்ளப்படுகின்றனர்.

புகைப்பிரியர்கள் அதனை நிறுத்த முயற்சிக்கும்போது புகைக்கும் நேரத்தை குறைப்பதோ, புகைப்பொருட்களின் பாவனை அளவினைக் குறைத்தோ அதனை நிறுத்த முற்பட முயற்சிப்பவர்கள் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்துடன் நிறுத்திவிடுவதன் மூலம் தன்னையும் மற்றவர்களையும் காத்து சமூகத்தில் உள நல ஆரோக்கியம் பெற்றவராக மாறமுடியும் என்றார்.

# அதிசிறந்த குடிவரவாளராக இலங்கைத் தமிழ் பெண் தெரிவு



கனடாவின் அதிசிறந்த குடிவரவாளர்களிற்கான தெரிவிற்காக மேற்கொள்ளப்பட்ட தேர்வொன்றில் ரொறன்ரோவின் பிரபல சட்டத்தரணியும், தொழிலதிபருமான மெலானி டேவிட் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இருபத்தைந்து சிறந்த குடிவரவாளர்களைத் தேர்வு செய்யவென மேற்கொள்ளப்பட்ட இந்த தேர்வில் 75 பேர் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றனர். அவர்களில் மறைந்த எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒலிவியா சோ, மற்றும் சிறந்த ஹிப்கொப் பாடகரும் 'weaving flag' பாடலின் மூலம் பிரபல்யமானவருமான ஹனான், எமி விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட நடிகரான ரோன்யா லீ வில்லியம்ஸ், ஒலிம்பிக்ஸ் மல்யுத்த வீரரான டானியல் இகாளி ஆகியோருடன், இலங்கைத் தமிழர்களின் தலை சிறந்த சட்டத்தரணிகளில் ஒருவரும் ரொறன்ரோவில் வளர்ந்து வரும் தொழிலதிபருமான மெலானி டேவிட் அவர்களும் இந்த விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டார்.

550 பேர் இந்த விருதுகளிற்காக பரிந்துரைக்கப்பட்ட போதும் அதன் போதான பலத்த தேர்வின் அடிப்படையில் 75 பேர் இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டு அதில் ஒருவராக மெலானி டேவிட தெரிவு செய்யப்பட்டார்.

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (A/L) Examination model Paper

| 02 | T | I |
|---|---|---|

நேரம் : 2 மணித்தியாலம்

இரசாயனவியல் - I
Chemistry - I

# கல்வி முரசு

ஆசிரியர் :
S.T.Janarththanan
(B.se)
(0777634345)

முக்கியம் :
- இவ்வினாத்தாள் 2 பக்கங்களில் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து அதனை விடைத்தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிக்க.

அகிலவாயுமாறிலி - $R=8.314 JK^{-1}mol^{-1}$
அவகாதரோ மாறிலி - $N_A = 6.022 X 10^{23} mol^{-1}$

## எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

01) காபனைக் கொண்ட பின்வரும் சேர்வைகளில் காபனின் ஒட்சியேற்ற எண் -4 ஐ உடையது
1) $CCl_4$ 2) $CH_2Cl_2$ 3) $CHCl_2$
4) SiC 5) $CO_2$

02) உயர் இருமுனைவுத் திருப்புதிறனைக் கொண்ட பதார்த்தம்
1) $BeCL_2$ 2) $CO_2$ 3) HF
4) NaCl 5) $COI_4$

03) பின்வரும் சேர்வைச் சோடிகளில் ஒத்த பிணைப்புக் கோணத்தைக் கொண்ட சேர்வைச் சோடி
1) $Sicl_4, SiH_4$ 2) $NH_3, NCl_3$ 3) $H_2O, H_4S$
4) $CCl_4, CHCl_3$ 5) $ICl_2^+, SeCl_2$

04) பின்வரும் பதார்தங்களில் எது $CCl_4$ உடனும் அமில KI உடனும் குலுக்கும்போது $CCl_4$ படையில் ஊதா நிறத்தைக் கொடுக்காது?
1) $Fe^{3+}$ (aq) 2) NaOCl (aq) 3) $PbO_2$ (S)
4) $SO_2(g)$ 5) $K_2 Cr_2 O_7$ (aq)

05) அறைவெப்பநிலையில் திரவ சல்பைட்டை உருவாக்கும் மூலகம்
1) Na 2) C 3) Cu
4) O 5) N

06) பின்வரும் நீர் கரைசல்களில் எமது கார ஊடகத்தில் $H_2O_2$ இனால் உயர் ஒட்சியேற்ற நிலைக்கு ஒட்சியேற்றப்படக் கூடியது?
1) $Mno_4^-$ (aq) 2) $Cr_2O_7^{2-}$(aq) 3) $Ni^{2+}$ (aq)
4) $Fe^{2+}$(aq) 5) $Cr^{3+}$(aq)

07) A, B, C, D எனும் நான்கு அசேதனச் சேர்வைகள் நீரிலும் செறிந்த HCl இலும் கரைதிறன் கீழே தரப்பட்டுள்ளது.

| சேர்வை | A | B | C | D |
|---|---|---|---|---|
| நீர் | கரையும் | கரையாது | கரையும் | கரையாது |
| Conc HCl | கரையும் | கரையும் | கரையாது | கரையாது |

A, B, C, D ஆகிய சேர்வைகளை சரியான ஒழுங்கில் தருவது.

| A | B | C | D |
|---|---|---|---|
| $NiSO_4(s)$ | $PbCl_2(s)$ | $Na_2SO_4(s)$ | $CCl_4(l)$ |
| $PbCl_2(s)$ | $Na_2SO_4(s)$ | $CCl_4(l)$ | $NiSO_4(s)$ |
| $Na_2SO_4(s)$ | $CCl_4(l)$ | $NiSO_4(s)$ | $PbCl_2(s)$ |
| $CCl_4(l)$ | $PbCl_2(s)$ | $NiSO_4(s)$ | $Na_2SO_4(s)$ |
| $PbCl_2(s)$ | $NiSO_4(s)$ | $CCl_4(s)$ | $Na_2SO_4(s)$ |

08) அசேதனச் சேர்வை A,$NH_4OH$(aq) உடன் வீழ்படிவைக் கொடுப்பதுடன் இவ்வீழ்படிவு மிகையான $NH_4OH$(aq) இல் கரையும். NaOH(aq) உடன் வீழ்படிவைக் கொடுக்கும். ஆனால் இவ்வீழ்படி மிகையான NaOH(aq) இல் கரையாது.
1) $Al_2(SO_4)_3$ 2) $ZnSO_4$ 3) $FeSO_4$
4) $NiNO_3$ 5) $Cr(NO_3)_3$

09) மைய அணுவின் கலப்பு ஒத்ததாகக் காணப்படாத சோடிச் சேர்வைகள்
1) $NH_3, NCl_3$ 2) $C_2H_4, C_2Cl_2$ 3) $H_2O, H_2S$
4) $CO_4, SF_2$ 5) $BeCl_2, C_2H_2$

10) பின்வரும் கற்றயன்களில் ஒன்றின் கரைசலினூடு $H_2S(g)$ செலுத்தப்படும் போது வீழ்படிவு kpfa hd kQrs : $(NH_4)_2S_x$ போது கரையக்கூடிய இக் கற்றயன்
(1) $Hg^{2+}$ (2) $Pb^{2+}$ (3) $Cd^{2+}$ (4) $Cu^{2+}$ (5) $Sb^{3+}$

11) பின்வரும் சேர்வைகளில ஐதான HCl உடன் தெளிவான மாற்றத்தை அவதானமாக தராதது.
(1) $NaAlO_2$ (2) SbOCl (3) $Mg(OH)_2$ (4) $K_2CrO_4$ (5) $AgNO_3$

12) பின்வரும் சேர்வைகளில் ஒவ்வொன்றிலும் 0.1 $moldm^{-3}$ செறிவுடைய சமகனவளவைக் கலக்கும்போது பாசிச் சாயத்திற்கு, காரத்திற்கு உரிய நிறத்தைக் காட்டுவது.
(1) $CH_3NH_2 + HCl$ (2) $C_6H_5COOH + KOH$ (3) $CH_3COOH + HCl$
(4) $NH_4OH + HBr$

13) $SO_3^{2-}$(aq) இனையும் $C_2O_4^{2-}$(aq) இனையும் வேறு பிரித்தறிவதற்குப் பயன்படுத்தக் கூடிய பதார்த்தங்கள்
(1) $H^+ / K_2Cr_2O_7$ (2) $H^+ / KMnO_4$ (3) $MgCl_2$ (4) $Br_2$ (5) $H_2O_2$

14) பின்வரும் பதார்த்தங்களின் 0.1 $moldm^{-3}$ செறிவுடைய கரைசல்களில் கொதிநிலை உயர்ந்தது
$C_6H_{12}O_6$ (2) NaCl (3) $AlF_3$ (4) HCN (5) $CH_3COOH$

15) பதார்த்தம் X, HI உடன் தாக்கம் புரிந்து அயடீனையும், அயடீனைக் கொண்ட இன்னுமோர் பதார்த்தத்தையும் உருவாக்கும்.

பதார்த்தம் X

$$\begin{array}{l} COOH \\ | \qquad + KOH \\ COOH \end{array}$$

(1) $O_3$ (2) $CuSO_4$ (3) $HNO_3$ (4) $H^+ / K_2Cr_2O_7$ (5) $H_2SO_4$

16) பின்வரும் ஒட்சைட்டுச் சோடிகளில் இரண்டு ஒட்சைட்டுக்களுக்கும் நிறத்தைக் கொண்டிராத சோடி
(1) $V_2O_5, N_2O$ (2) $N_2O, Cl_2O_7$ (3) $P_2O_5, NO_2$ (4) $PbO_2, NO$ (5) $MnO_2, Na_2O_2$

17) $Fe^{3+}$ உம் $I^-$ உம் தாக்கம் புரிந்து விடுவிக்கப்படும் $I_2$ இன் அளவினை அறிவதற்கு பயன்படுத்த முடியாத தாக்கு பொருள்
(1) $Na_2S_2O_3$ (2) $Na_2SO_3$ (3) $As_2O_3$ (4) $SO_2$(aq) (5) $KIO_3$

18) பின்வரும் கூட்ட மூலகங்களில் சரியாக மூன்று d - தொகுப்பு மூலகங்களைக் கொண்ட கூட்டம்
(1) Sc, Ga, Cr, Se (2) Mn, Mo, Sc, Y (3) Ge, Hg, Zn, At
(4) Tc, As, W, Pt (5) Ni, Ga, As, Zr

19) பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று?
1) ஊக்கிகள் தாக்கமொன்றின் வெப்பவுள்ளுறை மாற்றத்தை மாற்றாது
2) தாக்கமொன்றில் விளைவு சுய - ஊக்கியாகச் செயற்படும் அதேநேரம் தாக்கி சுய - ஊக்கியாகச் செயற்பட முடியாது.
3) தூள் நிலையில் பல்லின ஊக்கற் செயற்பாட்டில் காட்டி தூள் நிலையில் பயன்படுத்தப்படும் போது உயர்ந்த செயற்பாட்டை உடையதாக இருக்கும்.
4) ஊக்கி முற்தாக்கத்தினது ஏவற்சக்தியைப் போன்று பிற்தாக்கத்தினது ஏவற்சக்தியையும் குறைக்கும்.
5) தாக்கத்தின் சமநிலை மாறிலியாக ஊக்கி மாற்றும்.

20) பின்வரும் மூலகங்களில் பல்-அணு மூலக்கூறுகளாகக் காணப்படாதது
1) பொசுபரசு 2) சல்பர் 3) பிசுமது
4) சோடியம் வாயு 5) திண்ம அயடீன்

21) 1L வன்னீர் மாதிரி 0.005 mol $CaCl_2$ இனைக் கொண்டிருக்கும் $25^o$ C இல் CaSO இன் $K_{SP}$ இன் பெறுமானம் $2.4 x 10^{-5} mol^2 dm^{-6}$ ஆகும். மேற்படி வன்னீர் மாதிரியில் காணப்படும் $Ca^{2+}$ அயன்கள் வீழ்படிவாகத் தொடங்குவதற்குத் தேவையான $SO_4^{2-}$ அயன்களின் செறிவு
(1) $4.8 \times 10^{-3} moldm^{-3}$ (2) $4.5 \times 10^{-2} moldm^{-3}$ (3) $4.2 \times 10^{-3} moldm^{-3}$
(4) $4.5 \times 10^{-1} moldm^{-3}$ (5) $6.5 \times 10^{-3} moldm^{-3}$

22) $25^oC$ இல் திரவங்கள் A யும் B யும் இலட்சியக் கரைசல் ஒன்றினை ஆக்கும். மூல்ச் சதவீதம் 25 % A யைக் கொண்ட கரைசல் ஒன்றின் சமநிலையில் 50 % மூல்ச் சதவீதம் A காணப்பட்டது. தூய A இனதும் தூய B இனதும் ஆவி. அமுக்கங்கள் சம்பந்தமாக உண்மையானது
(1) $P_A^O = P_B^O$ (2) $P_B^O > P_A^O$ (3) $P_B^O = 3P_A^O$ (4) $P_A^O = 3P_B^O$ (5) $P_A^O = 5P_B^O$

23) $Na_2CO_3$ உம் $NaHCO_3$ உம் கொண்ட கரைசலின் 20.0 $cm^3$ பினோத்தலின் காட்டியாகப் பயன்படுத்தி 0.1 $moldm^{-3}$ $H_2So_4$ இனால் நியமிக்கப்பட்டபோது முடிவுப்புள்ளியில் அளவி வாசிப்பு ஆகக் காணப்பட்டது.
மீதிக் கரைசலுக்கு மெதையில் செம்மஞ்சள் காட்டி சேர்த்து 0.2 $moldm^{-3}$ $H_2So_4$ இனால் நியமிக்கப்பட்ட போது முடிவுப்புள்ளியில் அளவி வாசிப்பு 5.0$cm^3$ ஆகக் காணப்பட்டது. ஆரம்பக் கரைசலின் 1 L கரைசலின் $Na_2CO_3$: $NaHCO_3$ மூல் விகிதம்
1) 2 : 3 2) 4 : 3 3) 1 : 1
4) 5 : 2 5) 2 : 32

24) 0.2g சேதனச் சேர்வை 50 $cm^3$ நீரில் கரைக்கப்பட்டது. $25^oC$ இல் இக்கரைசலிற்கு 20 $cm^3$ ஈதர் சேர்க்கப்பட்டு நன்கு குலுக்கப்பட்டு சமநிலை அடையவிடப்பட்டது. இவ்வெப்பநிலையில் ஈதருக்கும் நீருக்கும் இடையில் இச்சேதனச் சேர்வையின் பரம்பல்க் குணகம் 4.7 ஆகும். $25^oC$ இல் ஒவ்வொன்றும் 10 $cm^3$ ஈதருடன் இருதடவைகள் பிரித்தெடுப்புச் செய்யப்பட்ட பின்பு நீர்ப்படையில் மீதியாக விடப்படும் சேதனச் சேர்வயின் அளவு
1) 0.0610 g 2) 0.0531 g 3) 0.0582 g
4) 0.0632 g 5) 0.4000 g

| Grade - 13 | க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள் G.C.E. (A/L) Examination model Paper | 02 T I |
|---|---|---|

நேரம் : 2 மணித்தியாலம்

இரசாயனவியல் - I
Chemistry - I

# கல்வி முரசு

ஆசிரியர் :
S.T.Janarthanan
(B.se)
(0777634345)

25) t°C இல் $NH_2COONH_4(s)$ கீழே தரப்பட்ட சமன்பாட்டிற்கு அமைய பிரிகையடைந்து சமநிலை அடையும்.

$$NH_4COONH_4(s) \rightleftharpoons 2NH_3(g) + CO_2(g)$$

t°C இல் இச்சமநிலைக்கான $K_P = 3.2 \times 10^{-5}$ moldm$^{-3}$


1 mol $NH_2COONH_4(s)$, t°C இல் வெப்பப் பிரிகைக்கு உட்பட்டு சமநிலை அடைந்தது. இச்சமநிலையில் மொத்த அமுக்கம்

(1) 0.060 atm (2) 0.057 atm (3) 0.037 atm (4) 0.003 atm (5) 0.005 atm

26) 0.1 moldm$^{-3}$ HCl இல் 1 dm$^3$ கரைசலினூடாக 10 A மின்னோட்டம் ஒரு மணித்தியாலத்துக்கு செலுத்தப்பட்டது. விளைவுக்கரைசலின் pH பெறுமானம் (IF = 96,500 C)

1) 0.2 2) 0.4 3) 0 4) 1 5) 2

27) புறவெப்பத் தாக்கத்தைக் காட்டுவது,

(1) $CO_2(g) + aq \rightleftharpoons CO_2(aq)$
(2) $Na^+(g) + aq \rightleftharpoons Na^+(aq)$
(3) $O(g) + 2e \rightleftharpoons O^{2-}(g)$
(4) $N_2(g) + 3H_2(g) \rightleftharpoons 2NH_3(g)$
(5) 

28) பின்வரும் எக்கரைசல் சோடிகளை கலக்கும்போது pH = 7 ஐக் கொண்ட தாங்கற் கரைசலைக் கொடுக்கும்?

(1) $C_6H_5COOH(aq)$ உம் $C_6H_5COONa(aq)$ உம் (pH வீச்சு; 3.2 - 5.2)
(2) $H_3PO_4(aq)$ உம் $NaH_2PO_4$ உம் (pH வீச்சு; 1.13 - 3.13)
(3) $NaH_2PO_4(aq)$ உம் $Na_2HPO_4(aq)$ உம் (pH வீச்சு; 6.21 - 8.21)
(4) HCOO(aq) உம் HCOONa(aq) உம் (pH வீச்சு; 2.75 - 4.75)
(5) $CH_3COOH$ (aq) உம் $CH_3COONa$(aq) உம் (pH வீச்சு; 4.76 - 4.78)

29) கீழே A, B, C, D ஆகிய நான்கு மூலகங்களின் மின்வாய் அழுத்தங்கள் தரப்பட்டுள்ளன.

| மூலகம் | $E^\ominus$(V) |
|---|---|
| P | -1.66 |
| Q | -0.13 |
| R | + 0.34 |
| S | - 2.38 |

மேலே தரப்பட்ட தரவுகளில் இருந்து குறிப்பிட்ட மூலகங்கள் ஐதான HCl உடன் தாக்குதிறன் ஏறுவரிசை


(1) R < Q < P < S (2) S < R < P < S (3) R < P < Q < S
(4) Q < S < P < R (5) S < P < Q < R

30) 1 moldm$^{-3}$ KI கரைசலின் 5.0 cm$^3$ உம் 0.008 moldm$^{-3}$ $Na_2S_2O_2$ கரைசலின் 5.0 cm$^3$ கொண்ட கலவையொன்றிற்கு சிறிதளவு மாப்பொருள் கரைசல் சேர்க்கப்பட்டது. இக்கரைசலுக்கு 0.02 moldm$^{-3}$ $Na_2S_2O_8$ கரைசலின் 5.0 cm$^3$ சேர்க்கப்பட்டது. 200s களுக்கு மின் நிரந்தரமான நீலநிறம் பெறப்பட்டது. இந்நீல நிறம் தோன்றியபோது இதில் காணப்படும் $Na_2S_2O_8$ மூலக்கள்


$$S_2O_8^{2-}(aq) + 2I^-(aq) \longrightarrow 2SO_4^{2-}(aq) + I_2(aq)$$


(1) $2 \times 10^{-5}$ mol (2) $2 \times 10^{-3}$ mol (3) $4 \times 10^{-5}$ mol
(4) $4 \times 10^{-2}$ mol (5) $3 \times 10^{-3}$ mol

31) KOH (aq) உடன் எந்த சேதனச் சேர்வை கருநாட்டக் கூட்டலைக் காட்டும்?





32) திண்மச் சமபகுதியத்தைக் காட்டுவது



33) 


34) பின்வரும் நான்கு சேதனச் சேர்வைகளையும் கருதுக.



இச் சேர்வைகளின் நீர்பகுப்புறும் ஆற்றலின் சரியான ஒழுங்கு

(1) d > a > b > c (2) a > d > b > c
(4) b > c > a > d (5) c > b > d > a

35) மூலத்திறன் இறங்குவரிசையைச் சரியாகத் தருவது

(1) $(CH_3)_2NH > (CH_3)_3N > C_6H_5NH_2 > CH_3NH_2$
(2) $(CH_3)_2NH > CH_3NH_2 > (CH_3)_3N > C_6H_5NH_2$
(3) $C_6H_5NH_2 > (CH_3)_3N > (CH_3)_2NH > CH_3NH_2$
(4) $(CH_3)_2NH > (CH_3)_3N > CH_3NH_2 > C_6H_5NH_2$
(5) $(CH_3)_3N > C_6H_5NH_2 > CH_3NH_2 > (CH_3)_2NH$

36) $CH_3COONH_4$ இருந்து $C_2H_5NH_2$ இனை வேறுபடுத்துவதற்கான முறை

(1) $H^+ / KMnO_4$ சேர்த்தல் (2) $Br_2$ நீர் சேர்த்தல்
(3) ஐதான NaOH உடன் வெப்பப்படுத்தல் (4) ஐதான HCl உடன் வெப்பப்படுத்தல்.
(5) $Cu_2Cl_2 / NH_3$ சேர்த்தல்.

37) பின்வரும் தாக்கங்களிற்கான வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் கருதுக.

$CH_3Cl \longrightarrow \dot{C}H_3 + Cl^-$ ; $\Delta H_1^\ominus$
$CH_3CH_2Cl \longrightarrow CH_3CH_2^+ + Cl^-$ ; $\Delta H_2^\ominus$
$(CH_3)_2CHCl \longrightarrow (CH_3)_2CH^+ + Cl^-$ ; $\Delta H_3^\ominus$
$(CH_3)_3C—Cl \longrightarrow (CH_3)_3C^+ + Cl^-$ ; $\Delta H_4^\ominus$

மேலே தாக்கங்களின் வெப்பவுள்ளுறைகளின் இறங்குவரிசை

(1) $\Delta H_3^\ominus > \Delta H_1^\ominus > \Delta H_2^\ominus > \Delta H_4^\ominus$ (2) $\Delta H_4^\ominus > \Delta H_3^\ominus > \Delta H_2^\ominus > \Delta H_1^\ominus$
(3) $\Delta H_2^\ominus > \Delta H_1^\ominus > \Delta H_4^\ominus > \Delta H_3^\ominus$ (4) $\Delta H_3^\ominus > \Delta H_2^\ominus > \Delta H_4^\ominus > \Delta H_1^\ominus$
(5) $\Delta H_1^\ominus > \Delta H_2^\ominus > \Delta H_3^\ominus > \Delta H_4^\ominus$

38) $(Pt(NH_3)_4(NO_2)Cl)\ SO_4$ இன் IUPAC பெயரினைச் சரியாகத் தருவது

(1) Tetraamminechloronitroplatinum(II) sulphate (VI)
(2) Tetramminechloronitroplatinum(IV) sulphate (VI)
(3) Chlorotetraamminenitroplatinum(V) sulphate (VI)
(4) Chloronitrotetraammineplatinum(IV) sulphate (VI)
(5) Nitrotetraamminechloroplatinum(IV) sulphate (VI)

39) நீர் மாதிரியொன்றில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவினை துணிவது சம்பந்தமான பின்வரும் செயற்பாடுகளில் முக்கியத்துவம் இல்லாதது

1) தாக்குபொருள் போத்தலினுள் நீர் மாதிரியை நிரப்பும்போது போத்தலை நீரினுள் அமிழ்த்துதல் வேண்டும்.
2) தாக்குபொருள் போத்தலினுள் தாக்கு பொருட்களைச் சேர்க்கும் போது குழாயின் முனை நீர்மாதிரியினுள் அமிழ்ந்து இருத்தல் வேண்டும்.
3) நியமிப்பின்போது முடிவுப்புள்ளிக்கு அண்மையில் காட்டியைச் சேர்த்தல் வேண்டும்.
4) காட்டியை தெரிவுசெய்யும்போது pH வீச்சிற்கு ஏற்றவாறு தெரிவு செய்தல் வேண்டும்.
5) நியமக் $KIO_3$ கரைசலைப் பயன்படுத்தி, தயாரிக்கப்பட்ட $Na_2S_2O_3$ கரைசலின் செறிவை சரிபார்த்தல் வேண்டும்.

40. அல்டிகைட்டுக்களைப் பற்றிய தவறான கூற்று

(1) தொழிற்பாட்டுக் கூட்டமான காபனையில் கூட்டம் வடிவத்தில் தளமாகும்.
(2) அண்ணவாகச் சமமான சார்மூலக்கூற்றுத் திணிவுகளை உடைய அல்டிகைட்டுக்களையும் அற்கேன்களையும் கருதுகையில், அல்டிகைட்டின் கொதிநிலை அற்கேன்களின் கொதிநிலையிலும் உயர்வாகும்.
(3) அண்ணளவாகச் சமமான சார்மூலக்கூற்றுத் திணிவுகளையுடைய அல்டிகைட்டுக்களையும் அற்ககோல்களையும் கருதுகையில், அல்டிகைட்டின் கொதிநிலை அற்ககோலிலும் உயர்வாகும்.
(4) ஐதான வன் காரம் முன்னிலையில் α - ஐதரசனைக் கொண்ட எல்லா அல்டிகைட்டுக்களும் ஒடுங்கலைக் காட்டும்.
(5) சில அல்டிகைட்டுக்கள் பீலிங்கின் கரைசலுக்கு விடையளிக்கமாட்டாது.

# ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 64 ஆம் ஆண்டு நிறைவு விழா



(சிகரம்)

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 64 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் முதல் நாள் நிகழ்வுகள் விளையாட்டுப்பொறுப்பாளர் தி.மு.ஸ்ரீரூபன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமானது.

ஜனசக்தி நிலையத்தின் மாணவிகளின் அணி வகுப்புடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் நல்லூரில் அமைந்துள்ள பாரதியார் உருவச்சிலைக்கு நிலைய உறுப்பினர்கள் மா.பசுபதி, செ.முருகையா மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.தொடர்ந்து சனசமூக நிலையத்தின் உபதலைவர் திலீப், உப செயலாளர் மு.யசோதன் மங்கள் விளக்கேற்றினார்கள்.

சனசமூக நிலையத்தின் கீதத்துடன் நிலையக் கொடியேற்றப்பட்டது. தொடர்ந்து முதல் நாள் விளையாட்டுக்களை நிலையத்தின் உறுப்பினர் மு.சந்திரராசாவும் சிறுவர்களிற்கான விளையாட்டுக்களை நிலையத்தின் உறுப்பினர் மா.சிவசுப்பிரமணியமும் ஆரம்பித்து வைத்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி கயிறிழுத்தல், தலையணைஅடிப்போர், விநோத உடை போன்ற போட்டிகள் என மாலை 6.00 மணிவரை நடைபெறுகிறது.

நிலையத் தலைவர் சூ.பரமராசா தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன நிலையச் செயலாளர் பா.மனோஜ் வரவேற்புரையையும் நல்லை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையும் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவிற்கு சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் கலந்து கொள்கின்றனர்.



# சாராய விற்பனையில் ஈடுபட்டவர்கள் கைது

வடமராட்சி மதுவரித்திணைக்களத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் சாராயம் மற்றும் கள் வைத்திருந்தவர்கள் திடீர் சோதனையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.


சட்ட விரோதமான முறையில் புலோலி பகுதியில் ஒருவர் சாராயமும், மருதங்கேணி தெற்குப் பகுதியில் இருவர் கள்ளும் வைத்திருந்ததான குற்றச்சாட்டில் மது பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் எதிர்வரும் 7ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டவுள்ளனர். இது போன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் மருதங்கேணிப் பகுதியில் நடைபெற்றுள்ளதோடு, பலர் சட்ட விரோதமான முறையில் கள் வைத்து விற்பனை செய்ய முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

# வாழையின் மருத்துவ குணங்கள்

பூக்களின் மருத்துவக் குணங்களைக் கொண்டு பல நோய்களைக் குணப்படுத்தியுள்ளனர் சித்தர்கள். தற்போது மலர்களை மருத்துவத்திற்கு மேல் நாடுகளில் பயன்படுத்துகின்றனர் .

பூக்களில் நாம் பலவற்றை அறிந்திருப்போம். அவற்றில் வாழைப்பூவைப் பற்றி அறியாதவர்கள் இருக்கவே முடியாது. வாழையை பல வீடுகளில் வளர்க கின்றனர். வாழைமரத்தில் மொத்தம் 14 வகைகள் உள்ளன.

முன்னோர்கள் பொதுவாக வாழையை பெண் தெய்வமாகவே வணங்கி வந்தனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த வாழையின் அனைத்துப் பாகங்களுமே மருத்துவப் பயன் கொண்டவை. இதில வாழைப்பூவை வாரம் இருமுறை சமைத்து உண்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றும். இதனால் இரத்தத்தின் பசைத் தன்மை



- சிகரம்

குறைந்து, இரத்தம் வேகமாகச் செல்லும்.

மேலும் இரத்த நாளங்களில் ஒட்டியுள்ள கொழுப்புகளைக் கரைத்து இரத்தத்தை சுத்தப்படுத்தும். இதனால் இரத்தமானது அதிகமான ஒட்சிசனை உள்ளிழுப்பதுடன், தேவையான இரும்புச் சத்தையும் உள்ளிழுக்கின்றது. இதனால் இரத்த அழுத்தம்,இரத்த சோகை போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

**சர்க்கரை நோயாளிகளுக்கு**

இரத்தத்தில் கலந்துள்ள அதிகளவு சர்க்கரைப் பொருளைக் கரைத்து வெளியேற்ற வாழைப்பூவின் துவர்ப்புத் தன்மை அதிகம் உதவுகிறது. இதனால் இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது.

**வயிற்றுப்புண் நீங்க:**

இன்றைய உணவுமுறை மாறுபாட்டாலும்,மன உளைச்சலாலும் வயிற்றில் ஒவ்வாமை உண்டாவதால் வயிற்றில் புண்களை ஏற்படுத்துகிறது. இந்தப் புண்களை ஆற்ற வாழைப் பூவை வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் வயிற்றுப் புண்கள் ஆறும். சமிபாடடையும் தன்மையும் அதிகரிக்கும்.

**மூலநோயாளிகளுக்கு:**

மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், உள்மூலம்,வெளிமூலப் புண்கள் இவற்றுக்கு சிறந்த மருந்தாக வாழைப் பூவைப் பயன்படுத்தலாம். வாழைப்பூ மூலக்கடுப்பு,இரத்த மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மலச்சிக்கலைப் போக்கும் . சீதபேதியையும் கட்டுப்படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

**பெண்களுக்கு:**


பெண்களுக்கு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள், மாதவிலக்கு காலங்களில் அதிக இரத்தப்போக்கு, அல்லது இரத்த போக்கின்மை,வெள்ளைபடுதல் போன்ற நோய்களுக்கு வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் நோய்கள் நீங்கும்.

கை,கால்களில் உண்டாகும் பித்த எரிச்சலைக் குணப்படுத்தும். உடல் எரிச்சலைப் போக்கும்.

நரம்புகளுக்கு வலுவூட்டும். குறிப்பாக மூளை நரம்புகளில் சூட்டைத் தணித்து மூளைக்கு புத்துணர்வைக் கொடுக்கும்இத்தகைய மருத்துவ குணமுள்ள வாழைப் பூவை நாமும் சமைத்து உண்டு நோயில்லாமல் வாழுவோம்.

# மெய்தான் பாருங்கோ...

## தவிர்க்கேலாத விடயங்கள்



இப்ப கிட்டடியில பூநகரிப்பக்கம் ‘ஒரு கூத்து’ நடந்ததெண்டு கேள்விப் பட்டனான் பாருங்கோ. அதென்னண்டு கேட்கிறியளே? ஹி...ஹி..ஹி...ஹி...

போர் முடிஞ்சு மூண்டு வருசமாப் போச்சுது. புலியளும் இல்லாமல் ஆச்சுது! இனி நமக்கென்ன! சனங்கள் எல்லாம் மறந்து போயிடுங்கள்... விசர்ச் சனங்கள்... எண்ட நினைப்பில இருக்கிற சில ஆட்களுக்கு காலம் தன்ர நியாயத்தீர்ப்பை வழங்கியிருக்குது எண்டு சொல்ல வாறன்.

பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் தமிழின அழிப்பைப் பாத்திட்டு, இன உணர்வோடையும் எதிர்காலச் சிந்தனைகளோடையும் விடுதலையை மனதார விரும்பிப் போராட வெளிக்கிட்ட பொடி - பொட்டையளுக்கை சில புல்லுருவியளும், சேந்து கொண்டதை இயக்கத்தின்ர தலைமைப்பீடம் கவனத்தில எடுக்கத் தவறினதாலதான், முள்ளிவாய்க்காலில எல்லாம் முற்றுப்புள்ளியாய் போனதெண்டு என்ர சகபாடி அடிக்கடி சொல்லுறவன் பாருங்கோ!

துவக்குத்தூக்க வக்கில்லாததுகள் எல்லாம் வன்னிப்போர்க் களத்துக்கை எத்தனை குடும்பங்களின்ர சந்தோஷங்களைத் துடைச்சழிச்சதுகள்... எண்டது வன்னிக்குள்ள வாழ்ந்தவனும் போருக்குள்ள முகம் குடுத்தவனுமான எனக்குத்தான் தெரியும்.

என்ர கண்ணுக்கு முன்னால எத்தனை தாய்மார் கருசுமந்த வயித்தில தங்கட கையளால அடிச்சு ; காலடிமண்ணைக் கையளால அள்ளிச் சபித்துத் துப்பி... காத்தில பறக்க விட்ட சம்பவங்கள் எத்தனை... எத்தனை..? அதெல்லாம் அந்தக்காத்தோடை போயிடுமெண்டே நினைச்சுக் கொண்டிருக்கினம்?

அப்பிடி நினைச்சுக்கொண்டு திரிஞ்ச ஓராளுக்குத்தான் மூண்டு வருசத்துக்குப்பிறகு... பூநகரிப் பக்கம் அங்கத்தேச் சனங்கள் முறையான ‘சாத்துப்படி’ சாத்தி... நார்நாராக் கிழிச்சுப் போட்டு விட்டிருக்குதுகள்.

இந்தச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட இன்னும் சிலபேருக்கு வயித்துப்புகைச்சலும், வயித்தால அடிக்குதெண்டும்... கேள்விப் பட்டன் பாருங்கோ! ஆனா, இது எந்தளவுக்கு உண்மையெண்டது எனக்குத்தெரியாது. எண்டாலும் நெருப்பில்லாமல் வெளியில புகை வராதெண்டதும் உங்களுக்குத்தெரியும் கண்டியளே!

நீங்கள் இந்தப் பூநகரிச் சம்பவத்தை குறிச்சு என்ன நினைக்கிறியள்? அங்கத்தேச் சனத்தைப் பற்றி என்ன சொல்ல வாறியள்?

‘பூமராங்’ ஆயுதம் மாதிரி... அது எறிஞ்ச வேகத்தில போய் தாக்கிப்போட்டு... திரும்பவும் எறிஞ்சவன்ர கையுக்கே வந்து கொண்டிருக்குது இப்ப. எதிரிக்கு எப்படி அடிப்பது... எண்டு சனங்களுக்கு பயிற்சி குடுத்திட்டு, பிறகு பிள்ளைபிடிக்க வெளிக்கிட்ட பிற்பாடு, அந்தப்பயிற்சியில சனங்கள் பெற்ற அனுபவங்களும் பாடங்களும்தான் இப்ப முன்னாள் பிள்ளைபிடிகாரரைப் பெரும்பாடாய்ப் படுத்துது பாருங்கோ!

நெருப்பு நூந்து போச்சுது... இனி நமக்கென்ன... சுதந்திரமாய் திரியலாம்... எண்டு பலபேர் நினைச்சுக் கொண்டிருக்கினம். நெருப்பு நூந்து போனது என்னவோ உண்மைதான். ஆனா சாம்பலுக்குள்ள இன்னமும் சிறுபொறியாக வன்னிச் சனங்களின்ர நெஞ்சுக்குள்ள கனன்று கொண்டிருக்கிற அந்தச் சிறுபொறி...?

நம்பிக்கெட்ட சனங்களின் வெப்பபிப்பிராயத்தின் மன வெளிப்பாடுகள் சட்டத்துக்கு புறம்பானதாக இருந்தாலும், அந்தச்சனங்கள் வன்னியில வாழும் போது சட்டத்தைக் காக்க வேண்டியவர்களால நிறையக் கரைச்சல் பட்டவையள் கண்டியளே! அதால இப்ப சனங்கள் தாங்களே சட்டத்தைக் கையில எடுக்கத் துணிஞ்சமாதிரி நிற்குதுகள்! இது தவிர்க்கேலாத விசயமாகத்தான் எனக்குப் படுகுது.

ஏனெண்டால் பாருங்கோ! நானும் வன்னியில உந்தப் பிள்ளைபிடிகாரரால பாதிக்கப்பட்டவன். வயது வித்தியாசமின்றி என்னையும் பிடிச்சுக்கொண்டு போனவங்கள். பயிற்சி எடுக்கச் சொன்னவங்கள். மாட்டனெண்டு சொன்னதுக்கு அடிச்சவங்கள்... இது எனக்கு மட்டுமில்லை... அண்டைக்கு அந்த இடத்தில என்ர வயசையொத்த ; என்வயசுக்கு மூத்தவை பல பேருக்கும்தான் இது நடந்தது.

எத்தனை அவலங்கள்... எத்தனை அவமானங்கள்... எத்தனை சோகங்கள்... எத்தனை சொந்த பந்த இழப்புகள்...? பிரச்சினை பூநகரியோடை புதைஞ்சு போகிடும்... எண்டு நினையாதையுங்கோ ஏனெண்டு கேட்கிறியளே?

உதைப்போல இன்னும் பலபேர் தர்மஅடிவாங்கப் பயந்து, தலையில முக்காடு போட்டுக்கொண்டு வன்னிப்பக்கம் முகத்தைக்காட்டாமல் வன்னிக்கு வெளியில முழுசிக்கொண்டு திரியினம். ஆனாலும் பாருங்கோ. இந்தப் பூமியில எந்தவொரு மனிசனும், தான் விதைச்ச வினையின் அறுவடையை அனுபவிக்காமல் செத்ததாக கதையுமில்லை; காரியமுமில்லை எண்டதை முதல்ல நினையுங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# அன்னா ஹசாரே குழுவினர் மீது தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் பாய்ச்சல்

(புதுடில்லி)

நாட்டில் ஜனநாயக அமைப்புகள் மீதும், பிரதமர் அலுவலகம் மீதும், மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்கும் வேலைகளில் அன்னா ஹசாரே குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அம்பிகா சோனி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நிருபர்களிடம் அவர் மேலும் கூறியதாவது: சிதைத்து விட்டனர் அன்னா ஹசாரேவுக்கு நெருக்கமாக இருக்கும் அவரின் குழுவினர், தங்களைப் பற்றிய செய்திகள் தலைப்புச் செய்தியாக வரவேண்டும் என்கிற நோக்கில், ஜனநாயக அமைபபுகள் மற்றும் பிரதமர் அலுவலகத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் அடிப்படை நம்பிக்கையை, சிதைக்கத் தொடங்கி விட்டனர். இதை ஒரு பிரசாரம் போலவே ஆரம்பித்து விட்டனர். இப்போது, அந்த குழுவில் இடம் பெற்றுள்ளவர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது. தனியாருக்கு நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கியதில் முறைகேடுகள் நடந்ததாக, மத்திய அரசின் தணிக்கைத் துறையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக, அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இது தொடக்க நிலை வரைவு அறிக்கையே தவிர, இறுதியான அறிக்கையல்ல. இதை மையமாக வைத்து, முறைகேடு நடந்ததாக கூறுவது பல்வேறு தவறுகளுக்கு வழி வகுத்துவிடும். கடந்த காலங்களில், இது போன்ற அறிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டும், திருத்தப்பட்டும் உள்ளன. நிரூபிக்க முடியுமா? பிரதமர் அலுவலகத்தைச் சீர்குலைக்க, அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி



கள கடும் கண்டனத்திற்குரியவை. முறைகேடு நடந்ததற்கான ஆதாரங்கள் அன்னா ஹசாரே குழுவிடம் இருக்கும் பட்சத்தில், அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். இவ்வாறு அம்பிகா சோனி தெரிவித்தார்.

# மக்கள் போராட்டத்துக்கு வெற்றி; பெற்றோல் விலையைக் குறைக்க முடிவு

(டில்லி)

மத்திய அரசு பெட்ரோல் விலையை ஒரே தடவையில் லீற்றருக்கு ரூ.7.54 உயர்த்தியதற்கு இந்தியா முழுவதும் கடும் ஆக்ரோஷ எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்புக்கு மத்திய அரசு பணிந்தது. அதன் உத்தரவின் படி, எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல் விலையை லீற்றருக்கு ரூ.1.60 முதல் ரூ.2 வரை குறைக்க முடிவு செய்துள்ளன. இதற்கான அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பெட்ரோலிய பொருட்களில் டீசல், சமையல் காஸ், மண்ணெண்ணெய் ஆகியவை மத்திய அரசின் விலை கட்டுப்பாட்டில் உள்ளன. அதே சமயம், பெட்ரோல் விலையை மட்டும் எண்ணெய் நிறுவனங்களே நிர்ணயிக்க 2010ஆம் ஆண்டு யூனில் அதிகாரம் வழங்கப்பட்டது. அதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கேற்ப பெட்ரோல் விலை பல முறை உயர்த்தப்பட்டது. எனினும் கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி ஆகியவற்றால் எண்ணெய் நிறுவனங்களுக்கு இழப்பு அதிகரித்துள்ளதாக கூறி, மீண்டும் விலையை உயர்த்த நிறுவனங்கள் முடிவு செய்தன.

நாடாளுமன்ற தொடர் நடைபெற்று வந்ததால், மத்திய அரசு அதற்கு ஒப்புதல் தராமல் இருந்தது. இந்நிலையில் நாடாளுமன்ற தொடர் முடிந்த மறுநாளே எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு பச்சைக்கொடி காட்டியது. இதையடுத்து, இதுவரை இல்லாத அளவுக்கு பெட்ரோல் விலையை லீற்றருக்கு ரூ.6.28 காசு உயர்த்தி எண்ணெய் நிறுவனங்கள் கடந்த 23ஆம் திகதி அறிவித்தன. இந்த அதிகரிப்புக்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.


# அப்பாவின் பிறந்த நாளில் மகள் கலந்துகொள்ளலாம்

(புதுடில்லி)



தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் விழாவில் பங்கேற்பதற்காக, ராஜ்யசபா எம்.பி. கனிமொழி தமிழகம் செல்ல சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. "2ஜி" அலைக்கற்றை ஊழல் வழக்கில் தி.மு.க. ராஜ்யசபா எம்பி. கனிமொழி, கடந்த ஆண்டு மே 20 ஆம் திகதி சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டு, ஆறு மாதங்களுக்கு பின், டில்லி உயர் நீதிமன்றம் கடந்த நவம்பர் 28 ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கியது. இருந்தாலும், அவர் தமிழகம் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா நாளை கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் பங்கேற்கவும், அதற்காக சென்னை செல்லவும் அனுமதி கோரி, சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் கனிமொழி மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஷைனி, அவர் தமிழகம் செல்ல அனுமதி வழங்கினார். அந்த நாட்களில், நீதிமன்றில் தோன்றுவதில் இருந்து விலக்கும் அளித்து உத்தரவிட்டார்.

# சர்வதேச சட்டங்களை மீறிய இந்தியா இத்தாலி குற்றச்சாட்டு முன்வைப்பு



மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில் சர்வதேச சட்டத்தை இந்தியா மீறி விட்டது என்று இத்தாலியின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் குலியோடெர்சி தெரிவித்துள்ளார்.

நடுக்கடலில் குமரி மீனவர் உட்பட 2 மீனவர்கள் சுட்டுக் கொலலப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இத்தாலி கடற்படை வீரர்கள் இருவருக்கும், 3 மாதங்களுக்குப் பிறகு கேரள உயர் நீதிமன்றம் கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கியது. ஆனால் நேற்றுமுன்தினம் வரை அவர்கள் சிறையில் இருந்து விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் இத்தாலி நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் எதிரொலித்தது. இந்தப் பிரச்சினை தொடர்பான எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்த இத்தாலி வெளிவிவகாரத்துறை அமைச்சர் குலியோடெர்சி, மீனவர்கள் கொல்லப்பட்ட வழக்கில் நம் நாட்டு வீரர்களுக்கு பிணை கிடைத்ததில் மகிழ்ச்சியடைய ஒன்றும் இல்லை. இவ்விவகாரத்தில் இத்தாலி நீதித்துறைக்கு இந்தியா தொடர்ந்து சவால் விட்டு வருகிறது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிணை கிடைத்ததை வெற்றியாக கருத முடியாது. இந்தப் பிரச்சினையில் இந்தியா இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கு எதிரானதாகும். சர்வதேச அளவில் கடல் கொள்ளையர்களுக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தை இந்தியா களங்கப்படுத்தியுள்ளது. நம் நாட்டு வீரர்களுக்குப் பிணை வழங்க இந்திய நீதிமன்றம் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. இது தொடர்பாக நம் நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சருடன் ஆலோசனை நடத்த உள்ளேன் என்று தெரிவித்தார்.

# இளவட்டங்கள் தூக்கிய கல்

(தூத்துக்குடி)



தூத்துக்குடி அருகே கிராமத்தில் நடந்த கோவில் திருவிழாவில், இளவட்டக்கல் தூக்கும் போட்டி நடந்தது. ஏராளமானோர் கலந்து கொண்டனர். கிராமங்களில் முன்னர் பெண்ணிற்கு, மாப்பிள்ளை தேர்வு செய்யும் போது, அந்த வாலிபர் இளவட்டக்கல் எனப்படும், மாப்பிள்ளை கல்லை முழுமையாக, கீழே போடாமல் தூக்கினால்தான், அவருக்கு அந்தப்பெண் கிடைக்கும். இதற்காக, இளைஞர்களிடையே கடும்போட்டி இருந்தது. மாப்பிள்ளையின் உடல்வலிமை, மனவலிமையை பரிசோதித்து பார்ப்பதற்காக, கிராம பெரியவர்களால், இம்முறை அப்போது கையாளப்பட்டது. தமிழர்களின் இந்த பாரம்பரியம் தற்போதைய நவீன காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவருகிறது.

இந்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள அயன்வடமலாபுரம் கிராமத்தில் அம்மன் கோவில் திருவிழாவில், இளவட்டக்கல் தூக்கும்போட்டி நடந்தது. இதில், ஏராளமானோர் கலந்து கொண்டனர். 110 கிலோ எடையுள்ள இந்த உருண்டை வடிவ கல்லை, முழுவதுமாக மேலே தூக்கி பின்புற முதுகுப்பகுதி வழியாக கீழே போட்ட வாலிபர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. ஆர்வமிகுதியில் பெண்களும், இந்த கல் தூக்கும்போட்டியில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. இங்கு, ஆண்டுதோறும் கோவில் திருவிழாவில், இந்த இளவட்டக்கல் தூக்கும்போட்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தைச் சேர்ந்தவருக்கு அமெரிக்காவில் உயர் பதவி

(சென்னை)

அமெரிக்காவின் உயர் பதவிகளில் இந்தியர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் தகுதி வாய்ந்த பொறியியலாளருக்கு உரிமம் வழங்கும் அமைப்பின் உயர் மட்ட நிர்வாகியாக, சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையை சேர்ந்த சொக்கலிங்கம் கண்ணப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இந்தப் பதவியை வரும் 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 26 வரை வகிப்பார். டெக்சாஸ் ஆளுநர் ரிக்கி பெரி இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்த கண்ணப்பன், முதுகலை இயந்திரவியல் துறையில் டெக்சாஸ் பல்கலையில் படித்தார். அமெரிக்க நிறுவனத்தில் வடிவமைப்பு பொறியியலாளராக இவர் பணிபுரிகிறார். ஹூஸ்டனில் உள்ள மீனாட்சி கோவிலை நிறுவியவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதியில் ஊழல்; நீதிபதி இடைநிறுத்தம்



(ஐதராபாத்)

சுரங்க மோசடி வழக்கில் சிக்கிய ஆந்திராவை சேர்ந்த மாபெரும் பணக்காரரான மாநில அரசையே ஆட்டி வைக்கும் ரெட்டி சகோதரர்களில் ஒருவரான ஜனார்த்தன ரெட்டிக்கு பிணை வழங்குவதில் சில தளர்வுகளை கையாண்டு சலுகைகள் வழங்கியதாக நீதிபதி ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஆந்திரா மற்றும் கர்நாடக எல்லையில் உள்ள ஒபலாபுரம் கனிம சுரங்கம் ஏலம் விடப்பட்டதில் முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் 100 இற்கும் மேற்பட்ட கோடி இழப்பு ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து முன்னாள் அமைச்சர் ஜனாத்தனரெட்டி பதவியை இழந்ததும் சி.பி.ஐ அதிகாரிகள் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி பட்டாபிராமராவ் விசாரித்து வந்தார. சிறையில் இருக்கும் ரெட்டி பிணை மனுத் தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நீதிபதி எளிதாக பிணை வழங்கினார். இதில் சட்ட மீறல்கள் இருப்பதாக மேல்மட்ட நீதிபதிகளுக்கு தகவல் போனது. இதனையடுத்து ஆந்திர தலைமை நீதிபதி விசாரித்து சி.பி.ஐ. நீதிபதி பட்டாபிராம்ராவை இடைநிறுத்தம் செய்தார்.

# கண்ணதாசனின் மனைவி காலமானார்


(சென்னை)

கவிஞர் கண்ணதாசனின் முதல் மனைவி பொன்னம்மா ஆச்சி (வயது-79) சென்னையில் கடந்த மாதம் 29ஆம் திகதி காலமானார். உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த பொன்னம்மா ஆச்சி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவருக்கு 3 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர்.

கோடம்பாக்கம் சுப்பராய நகரில் ஏஆர்.ரஹ்மான் ஸ்டுடியோ அருகில் உள்ள வீட்டில் பொன்னம்மா ஆச்சியின் உடல் வைக்கப்பட்டிருந்தது. அவரின் உடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

# ஒரு மாதக் காணிக்கை

(குருவாயூர்)



கேரளா-குருவாயூரில் பிரசித்திப் பெற்ற கிருஷ்ணன் கோவிலில், கடந்த மாதம் பக்தர்கள் காணிக்கையாக உண்டியல்களில் செலுத்திய ரொக்கம், தங்கம், வெளளிப் பொருட்கள் எண்ணப்பட்டன. இதில், ரொக்கமாக மூன்று கோடியே 63 இலட்சத்து 56 ஆயிரத்து 845 ரூபாயும், 3 கிலோ 853 கிராம் எடை கொண்ட தங்க நகைகளும், 7 கிலோ மற்றும் 98 கிராம் வெள்ளிப் பொருட்களும் கிடைத்தாக கோவில் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நேபாள உயர்நீதிமன்ற நீதியரசர் காரில் வைத்து சுட்டுக்கொலை



நேபாள உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் ரானா பஹதூர் பாம் இனந்தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தலைநகர் காத்மண்டில் நீதியரசர் ரானா பஹதூர் பாம் (வயது - 61) காரில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் காரை நிறுத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். படுகாயமடைந்த அவர் அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அனுமதிக்காத நிலையில் பின்னர் மேலும் இரு வைத்தியசாலைகளுக்கு இடமாற்றப்பட்டார். எனினும் அவரை மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

இவர், 4 வருடங்கள் உயர் நீதிமன்ற நீதியரசராக பதவி வகிக்கிறார். குற்றவியல் வழக்களில் குறைந்த தண்டனை வழங்குவதற்காக இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக அவர நீதிமன்ற வழக்குகளை விசாரிப்பதிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. இதே வேளை நீதியரசரின் மெய்ப் பாதுகாவலர் காயமடைந்துள்ளார். காரின் சாரதிக்கு காயம் ஏற்படவில்லை. அவர் தற்போது பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகிறார். இத்துப்பாக்கிச் சூடானது நீதித்துறையின் ஊழல்களுக்கு எதிரான செயற்பாடு என சம்பவ இடத்தில் காணப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வித ஆசை அதில் இது புது விதம். ஜேர்மனி, பியுசன் நகரில் சுற்றுலா சென்ற சீன இளம் தம்பதியினர் சுற்றுலா சென்ற இடத்தில் தங்கள் திருமண விழாவை மீண்டும் நிகழ்த்தி மகிழ்ந்தனர்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றார்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட மிட் ரோம்னி தகுதி பெற்றுள்ளார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் ஜன நாயக கட்சி சார்பில் ஜனாதிபதித் பராக் ஒபாமா இரண்டாவது முறையாக போட்டியிடுகிறார்.



குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னி போட்டியிடுகிறார்.டெக்சாஸ் மாகாணத்தில் குடியரசு கட்சி வேட்பாளரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நடந்தது. இதில் அக்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர். ஏற்கனவே பல்வேறு மாகாணங்களில் நடந்த வாக்கெடுப்பில் முன்னணியில் இருந்த மிட் ரோம்னி, டெக்சாஸ் மாகாண ஓட்டெடுப்பிலும் பெரும்பான்மை பெற்றார். இதன் மூலம் அவர் குடியரசு கட்சி வேட்பாளருக்குரிய தகுதி பெற்று ஒபாமாவை எதிர்த்து போட்டியிடுகிறார். இருப்பினும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி புளோரிடாவில் நடக்கும் குடியரசு கட்சி கூட்டத்தில் அவர் அதிகார பூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவார். குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்குரிய வேட்பாளராக நான்கு பேர் போட்டியிட்டனர். கட்சி பிரதிநிதிகள், 1144 பேரின் ஆதரவு கிடைக்க பெற்றவர் தான் அதிகார பூர்வ வேட்பாளராக முடியும். தற்போது மிட் ரோம்னிக்கு, 1183 பிரதிநிதிகளின் ஆதரவுகிடைத்துள்ளது.

உலகச் செய்திகள்

# சதாம் ஹுசேனின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளியிட மகள் முடிவு



ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன தன் கைப்பட எழுதியவற்றை வாழ்க்கை வரலாற்று புத்தகமாக வெளியிட அவரது மகள் ரகத் சதாம் ஹுசேன் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஈராக் நாட்டில் அரை நூற்றாண்டுகாலம் தலைவராக திகழ்ந்தவர் சதாம் ஹுசேன்.

அமெரிக்காவிற்கு சிம்மசொப்பனமாக விளங்கிய சதாம் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தூக்கிலிடப்பட்டார். சதாம் தனது நினைவுகள் அனைத்தையும் கைப்பட டைரி ஒன்றில் குறித்து வைத்துள்ளார். கவிதைகள், கடிதங்கள் போன்றவைகளும் அவர் எழுதியுள்ளார். இந்த எழுத்துக்களை அவரது மூத்த மகள் ரகத் புத்தகமாக வெளியிட திட்டமிட்டுள்ளார். தற்போது ஜோர்டானில் வசித்து வரும் அவர், என் தந்தை எழுதியுள்ளவை அனைத்தும் உண்மையான நினைவுகள் என்று கூறியுள்ளார். அவரது நினைவுகளை உலகறியச் செய்வது மகளாகிய எனது கடமை என்று கூறியுள்ளார்.


ரகத் ஏற்கனவே 2009ஆம் ஆண்டு சதாமின் வக்கீல் மூலமாக 'சதாம் ஹுசேன் ஆன் அமெரிக்கன் செல்' என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார். தற்போது தனது தந்தை கைப்பட எழுதிய குறிப்பினையும் கவிதைகளையும் வாழ்க்கை வரலாறு புத்தகமாக விரைவில் வெளியிட வெளியீட்டாளரைத்தேடி வருவதாக அல் அரேபியா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. சதாம் ஹுசேன் ஏற்கனவே நான்கு நாவல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ரகத்தின் கணவரும், கணவரின் தம்பியும் சதாமின் ஆட்களால் பல ஆண்டுகளுக்கு முன்பு படுகொலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனத்துடன் நம்பிக்கையை ஏற்படுத்த 91 சடலங்களை ஒப்படைத்த இஸ்ரேல்

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டபோது கொல்லப்பட்ட 91 பலஸ்தீனியர்களின் சடலங்களை பலஸ்தீன அதிகார சபையிடம் இஸ்ரேல் கையளித்தது.

1975 ஆம் ஆண்டு பலியானவர்களின் சடலங்களும் இவற்றில் அடங்கும். தற்கொலை குண்டுதாரிகளின் சடலங்களும் இதில் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீனிய கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் பகுதியாக இச்சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையாக இப்பரிமாற்றம் மேற கொள்ளப்பட்டுள்ளது என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இஸ்ரேலிய இராணுவ மயானத்தில் எதிரிப் போராளிகளுக்கான பகுதியில் புதைக்கப்பட்டு, இலக்கமிடப்பட்டிருந்த சடலங்களே பலஸ்தீன அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி சடலங்களில் 79 சடலங்கள் ரமல்லாவுக்கும் 12 சடலங்கள் காஸாவுக்கும் கொண்டு செல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகார சபையின் சிவில் விவகாரங்களுக்கான பலஸ்தீன பொதுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பிய தலைவர்களுடன் ஒபாமா கலந்துரையாடல்

ஐரோப்பிய ஒன்றிய நெருக்கடி மற்றும் சிரியா தொடர்பாக ஐரோப்பிய தலைவர்களுடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்துரையாடியுள்ளார். ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மேர்கல், பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஒலண்ட் மற்றும் இத்தாலி பிரதமர் மரியோ மொட்டி ஆகியோருடன் வீடியோதொடர்பாடல் மூலம் இந்தக் கலந்துரையாடலை ஒபாமா நடத்தியுள்ளார்.

மெக்சிக்கோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டிற்கான தயார்படுத்தல்களை நெருக்கமான முறையில் இணைந்து முன்னெடுக்க தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளர். ஐரோப்பிய பொருளாதார நெருக்கடி குறித்து எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடத்தக்க விடயங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் சிரிய வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதன் முக்கியத்துவம் குறித்தும் நான்கு நாடுகளின் தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

# ரஷ்ய ஜனாதிபதியின் புகைப்படம் மீது எச்சில் துப்பியவருக்கு சிறை

ரஷ்யாவில் நடைபெற்ற ஒரு ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி விளாடிமிர் புடின் புகைப்படத்தின் மீது எச்சில் துப்பியவருக்கு 15 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் புடின் வெற்றி பெற, தேர்தலில் தில்லுமுல்லு நடந்ததாக கூறி அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்து வருகிறது.

தலைநகர் மாஸ்கோவில் கடந்த 7ஆம் திகதி ஐக்கிய ரஷ்ய கட்சி அலுவலகம் முன்பு நடந்த ஆர்பபாட்டத்தில் திமித்ரி கருயேவ் (வயது-20) என்ற இளைஞர், புடின் புகைப்படத்தின் மீது எச்சில் துப்பினார். இதுகுறித்து அவன் மீது வழக்குப் பதிவு செய்து பொலிஸார் விசாரித்தனர். பொலிஸ் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, திமித்ரி, பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்று வாதிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த திமித்ரி, எனக்கு அடிக்கடி தும்மல் வரும். ஆர்ப்பாட்டத்தின் போது தும்மினேன். புடின் படத்தின் மீது எச்சில் துப்பவில்லை என்று கூறினார். இவரது சட்டத்தரணி கூறுகையில், திமித்ரியின் செயலில் உள்நோக்கம் எதுவும் இல்லை. அடிக்கடி தும்முவது அவரது இயல்பு என்றார். ஆனால் இதை ஏற்க மறுத்த ரஷ்ய நீதிமன்றம், திமித்ரிக்கு 15 நாள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது.

# கற்றலை வலுவூட்டும் வகுப்பறை முகாமைத்துவம்

ஒரு நிறுவனத்தினதோ, செயற்பாட்டினதோ வெற்றி அதன் முகாமைத்துவத்தினது உச்ச வெளிப்பாட்டிலேயே தங்கியுள்ளது. தமது தேவைகளை அந்நிறுவனம் திருப்தியோடு நிறைவு செய்யுமெனப் பயனாளிகள் வாஞ்சையோடு எதிர்பார்க்கின்றார்கள். எதிர்பார்ப்பு நிறைவேறாத விடத்து பயனாளிகளிடையே அதிருப்தி நிலை ஏற்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அரசின் சட்ட திட்ட வரையறைக்குட்பட்டு கட்டுக்கோப்புடன் சமூகத்திற்கு நற்பிரசைகளை உருவாக்கிக் கொடுக்கும் ஒரு உன்னத நிறுவனமாகப் பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலைக்குச் சமூகத்தின் பல அபிலாசைகளை நிறைவு செய்ய வேண்டிய கட்டுப்பாட்டுக்கு இத்தகைய பெறுமதி வாய்ந்த நிறுவனத்தின் வெற்றி அப்பாடசாலை முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.

இதில் அரசாங்கத்தின் தலையீடுகள் அரசியல் தலையீடுகள் என்பன முகாமைத்துவத்தைத் தட்டிக் கொடுக்கும் சிலவேளை, அச்சுறுத்தும் நெருக்கீடுகளையும் கொடுக்கும். இவை அனைத்தையும் சுமந்து தனது இலக்கை அடைய வைப்பதிலேயே முகாமைத்துவத்தின் வெற்றி தங்கியுள்ளது. அதாவது கல்வித் துறையில் வகுத்துள்ள விதிமுறைகளையும் நோக்கங்களையும் செம்மையாக நிறைவு செய்ய உதவும் விதிமுறையே பாடசாலை முகாமைத்துவம்.

பாடசாலையில் இரண்டு முக்கிய செயற்பாடுகள் நடைபெறுகின்றது. அவற்றுள் ஒன்று கற்றல் மற்றையது கற்பித்தல். இவை இரண்டும் ஒருங்கே நடைபெறும் இடம் வகுப்பறையாகும். இச் செயற்பாட்டின் வெற்றி வகுப்பறை முகாமைத்துவத்திலே பெரிதும் தங்கியுள்ளது. வகுப்பறையின் நிர்வாகியாக வகுப்பாசிரியரும், பங்காளிகளாக பாட ஆசிரியர்களும் தமது பயனாளிகளுக்கு சிறந்த சேவையை வழங்க முயற்சிப்பார்கள். இங்கு இடர்பாடுகள் ஏற்படின் அது சமூகத்தையே பாதிக்கும். இதிலிருந்து விடுபடத் தத்தமது கடமைகளை சரிவர நிறைவேற்ற பாடசாலை முகாமைத்துவக் குழு தனது பங்களிப்பை வழங்கும். இச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவது அதிபரின் முகாமைத்துவத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. பொருத்தமான வேலைகளுக்குப் பொருத்தமான ஊழியரை நியமிப்பது (RIGHT MAN FOR THE RIGHT JOB) அதிபரின் ஆளுமையிலே தங்கியுள்ளது.

### வகுப்பறை முகாமைத்துவம்.

பாடசாலையில் முக்கிய செயற்பாடாக



மு. விக்னேஸ்வரன்
(அதிபர்)
யா. உரும்பிராய்
சைவத்தமிழ்
வித்தியாலயம்.

கலைத்திட்ட அமுலாக்கம் இடம் பெறுகின்றது. இதன் வெற்றி - தோல்வியின் தோற்றுவாய்கள் வகுப்பறையிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. மாணவர்கள் அறிவைப் பெற்றுக் கொள்ளும் களமாக அமைவதுடன் பாடசாலையின் உப அலகாகவும் உள்ளது. இங்கே ஆசிரியர் மாணவரிடையே ஆளிடைத் தொடர்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மாணவருடைய பலம், பலவீனங்கள் வெளிக்கொணரப் படுகின்றன. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சீராக அமைவதற்கு வகுப்பறை முகாமைத்துவம் மிக மிக அவசியமானது.

ஒவ்வொரு வகுப்பறையிலும் இது வெற்றிகரமாக அமையும் போது பாடசாலை முகாமைத்துவம் சிறப்பாக அமைவதற்கும் கல்வியின் பண்புத்தரம் உயர்வதற்கும் வாய்ப்புண்டு.

### பன்முக முகாமைத்துவமுடைய வகுப்பறை

ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமின்றி இன்னும் பல தரப்பினரும் தொட்டும் செல்லக்கூடிய மகிழ்ச்சியான சூழலை உடையதாக இருக்க வேண்டும். ஆசிரியர் மாணவருடைய உறவு அந்நியோன்யமுடையதாக இருப்பதால் வகுப்பறை நல்லொழுக் கத்துடன் கூடிய சூழலைக் கொண்டிருக்கும்.



கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்தும் கரும்பலகை, வெண்பலகை, பசும்பலகை போன்றவை எப்போதும் சுத்தமானதாகவும் ஒழுங்காகவும் இருத்தல் வேண்டும்.

மாணவர்களின் நலநோம்பல் அவர்களுடைய காப்புத் தேவைகள், கற்றல், கற்பித்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் சம்பந்தமான ஆவணங்கள், அறிக்கைகள் என்பவற்றை சரிவரப் பேணல் வேண்டும். இது பாடசாலையின் சிறப்பான முகாமைத்துவத்துக்குச் சான்று பகரும். சுருங்கக் கூறின் பாடசாலை வாழ்வின் ஒரு பகுதி ஆசிரியரும், மாணவரும் வாழும் இடம், இங்கு பெறும் அனுபவங்கள் மூலம் வாழ்க்கை முழுவதும் தூய்மை பேணப்படும்.

### வகுப்பறையின் உளவியல் சூழல்

ஆசிரியர் பல்வேறு மாணவரிடையே ஏற்படும் சமூகப் பிணைப்புகள், பௌதிக ஒழுங்குகள் இவற்றினாலேற்படும் உளவியல் நிலைமைகள் ஆகியன சமூக உளவியல் நிலையாகும். கற்றலை மாணவர்களுக்குரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஆக்கும் போது சிறந்த உளவியல் சூழல் உருவாக உதவுவதுடன், மாணவர்களுக்கும் உளரீதியான திருப்தி ஏற்படும்.

அத்துடன் பண்பு ரீதியாகத் தரவிருத்தியையும் தரும் வகுப்பறையானது உயிரோட்டமுள்ள இடம். ஆசிரியர் மாணவர் உறவு சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்துக்கு பக்கபலமாக அமையும். திட்டமிட்ட வகையில் இங்கு நிலவுகின்ற ஜனநாயக ரீதியான பண்புகள், புத்திசார்ந்த தீர்மானங்கள் மாணவர்களை உவப்பான களநிலைக்கு அழைத்துச் செல்லும். கல்வி உலகில் பல சவால்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் வகுப்பறை முகாமைத்துவம் சீராக அமையும்போதே கல்வி அபிவிருத்தி, மாணவர் முன்னேற்றம் என்பவற்றில் உச்ச பயனை எய்தமுடியும்.

### வகுப்பறையின் பௌதிகச் சூழல்

வகுப்பறையின் பௌதக்கப் பொருட்களை முறையாக வைத்துக் கொள்வதினால் ஏற்படுகின்ற சூழலே வகுப்பறைச் சூழலாகும். வளர்ந்தோர்கள் இளையோர்கட்கு வழங்குகின்ற கல்வியை உணர்வு பூர்வமாகக் கட்டுப்படுத்துவது அவர்கள் செயற்படுகின்ற சூழலைக் கட்டுப்படுத்துவதிலேயே பெருமளவு தங்கியுள்ளது. வகுப்பறை என்பது பாடசாலையின் ஒரு உப அலகாகும். இதில் மாணவர்களைத் தொகுதியாக்குவதும் சூழலை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்திக் கொள்வதும் அதி முக்கிய நோக்கமும் கடமையுமாகும். இவ்வாறாக ஆசிரியாகள் மேற்கொள்வதால் கற்றலில் நல்ல முறையிலும் சாதகமான வழியிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். சிறந்த கவிநிலையுடன் மனதை மகிழ்விக்கக்கூடிய சூழ்நிலையில் வகுப்பறை அமையும்போது மாணவருடைய நடத்தை சீராக அமைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும்.

அன்பு, நேயம், சிறந்த தொடர்பாடல், புத்தாக்க முறைகளை கையாளுதல், தேவையானபோது நண்பனாக செயற்படல் என்பவற்றினூடாக கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தல் வேண்டும். வகுப்பறை முகாமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கு மாணவரைப் பற்றிய தகவல்களை ஆசிரியர்கள் அறிந்திருப்பதும், ஆளுமைப்படுத்துவதும் மிக அவசியம். நிறுவனம் ஒன்றின் தரமான செயற்பாட்டிற்கு சட்டவிதிகள் சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் எவ்வாறு முக்கியமானதோ அது போன்றே வகுப்பறையில் தீர்மானங்கள் மேற்கொள்ளல், சம்பிரதாயங்கள் பேணுதல் போன்றவற்றால் பிள்ளைகள் சுயமாக இயங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

### வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும்

கைத்தொழில் முகாமை கல்வி முகாமைத்துவம் பல அம்சங்களில் வேறுபடுகின்றது. இலாப நோக்கம் இங்கு முக்கியத்துவம் பெறுவதில்லை. மாறாகக் கல்வியின் விளைவுகளை அளவிடுதல் சற்றுக்கடினமானது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர்களிடையே தனியாள் வேறுபாடுண்டு. எனவே கற்றல் விளைவுகளை அதிகரிப்பதில் முகாமைத்துவம் தொடர்பான அறிவு அவசியமானது. கல்வியியலாளர் டேவிட் என்பவரின் கருத்துப்படி ஆசிரியர்கள் தலைவர்களாகவும், அபிவிருத்தி யாளர்களாகவும், முகாமையாளர்க ளாகவும், மேற்பார்வையாளராகவும் மட்டுமன்றி ஆளணி முகாமையாளராகவும் இருத்தல் வேண்டும். எனவே வகுப்பறை முகாமைத்துவத்தின் ஏழு அம்சங்களையும் பின்பற்ற வேண்டும். அவையாவன திட்டமிடல், ஒழுங்கமைத்தல், இணைத்தல், செயற்படுத்தல், நிர்வகித்தல், தொடர்புபடுத்தல், பாதுகாத்தல் என்பனவாகும். எனவே ஆசிரிய ரொருவர் முகாமைத்துவ நுட்பங்களையும், கற்பித்தல் நுட்பங்களையும் நடைமுறைப்படுத்திக் கொள்வ தன்மூலம் பாடசாலையின் நிலையை உயர்த்திக்கொள்ள முடியும்.

அதாவது மாணவரின் நம்பிக்கையைப் பேணும் வகையில் உரிய பாடத்திற்கு உரிய நேரத்திற்கு வகுப்பறைக்குச் சென்று உரிய நேரத்தில் பாடத்தை முடிக்க வேண்டும் அத் துடன் பாடத்தை வெற்றிகரமாக நடாத்தி முடித்தல் முக்கிய கடமையாகும். எனவே ஆசிரியர் எப்போதும் பாட ஆயத்தத்துடன் இருத்தல் வேண்டும். தொடர்பாடலில் சமகாலத்துக் கேற்ற வகையில் போதிய தேர்ச்சி அவசியம். சேவைக் காலத்தில் ஒரு முறை பெற்ற தொழிற்பயிற்சிகளைத் தள மாக வாழ்க்கை பூராகவும் வைத்துக்கொள்ளாமல் காலத்திற்கேற்ற வகையில் பயிற்சிகளைப் பெற்று வகுப்பறையில் நடைமுறைப்படுத்துதல் அவசியமானது.

### நேர முகாமைத் துவம்:

சம காலத்தில் அனைத்துத் தரப்பினராலும் பேசப்படுகின்ற முக்கிய அம்சம் நேரம் இல்லை என்பதாகும். இது ஏன்? என்ற கேள்விக்குப் பல பதில்கள் இருந்தாலும் பாடசாலைகளில் இதற்கான காரணம் திட்டமிடாமையே என்பதை மறுக்க முடியாது. ஆசிரியர்கட்கு தங்களின் குடும்பத் தேவைகள் எந்தளவுக்கு முக்கியத்துவமோ அதே போன்று தன்னை நம்பி வந்த மாணவனுக்கு அவனது அபிலாசைகளை நிறைவு செய்வது முக்கியமானது. இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஒரு பிரதான நாட்காட்டியொன்றை (Master Calender) அமைத்துக்கொள்வது பொருத்தமானது அது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபட்ட தன்மையைக் கொண்டதாக அமையும்.

ஒரு பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு இடம்பெற சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் அவசியமானது. வகுப்பறை முகாமைத்துவத்தின் வெற்றி பாடசாலையின் முகாமைத்துவத்தைச் சிறப்புறச் செய்யும். அதற்கப்பால் கல்வியிற் பண்புதரம் உயர வாய்ப்புண்டு. கல்வி உலகம் பல்வேறு சவால்களை எதிர் கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் வகுப்பறை முகாமைத்துவம் பண்பு சார்ந்த ஒன்றாகவும் தர உறுதிமிக்க ஒன்றாகவும் அமையும் போதே பாடசாலையிலிருந்தும் தரமான கல்வியை வழங்க முடியும். எனவே சிறந்த வகுப்பறை முகாமைத்துவமே பாடசாலையின் உயிர்நாடி என்பது அசைக்கமுடியாத உண்மை.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆசை காட்டி நிதி மோசடி

## சூத்திரதாரி பிணையில் விடுதலை

(திருநெல்வேலி)

வெளிநாட்டுக்கு இளைஞர்களை அனுப்புவதாகக் கூறி கோடிக்கணக்கில் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றி மோசடி செய்த ஒருவர் யாழ். நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார். இருந்தும் அவரை பிணை எடுப்பதற்கு எவரும் இல்லாத நிலையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவரிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்களில் 8 பேர் இவர் மீது பணமோசடி வழக்கு தாக்கல் செய்திருந்தனர். நேற்று இவர் யாழ். நீதிமன்றில் தனது சட்டத்தரணி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் வெளிநாட்டு பட்டப்படிப்புகள் நிறுவனம் ஒன்றை இவர் ஆரம்பித்திருந்தார். வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பல இளைஞர்களிடம் இவர் பணம் வசூலித்திருந்தார். ஆனால் பின்னர் நிறுவனம் மூடப்பட்டமையினாலும் இந்நபரை காணக் கிடைக்காததினாலும் பலர் தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர்.

இவர்களில் 8 பேர் யாழ். நீதிமன்றில் இவருக்கெதிராக தனித்தனி வழக்குத் தொடர்ந்தனர். 8 தனித்தனி வழக்குக்கும் காசுப் பிணையும் ஆட்பிணையும் தனித்தனியாக நீதவானால் நேற்று செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அக்கரைப்பற்றை சேர்ந்த மொகமட் அஷ்னி கபூர் என்பவர் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர் அக்கரைப்பற்று நகரசபை உறுப்பினராக உள்ளார்.

அச்சுவேலி, ஆனைக்கோட்டை, உரும்பிராய், சுன்னாகம், திருநெல்வேலி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாலேயே இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இலட்சக் கணக்கில் இவர்கள் வெளிநாட்டு மோகத்தால் இந்நபரிடம் பணம் செலுத்தியிருந்தார்கள்.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (137,எஸ்)

# நல்லூர் ஆலய சூழலில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தின் போது ஆலயச் சூழலில் உள்ள கச்சான் கடைகள், உணவகங்கள் உட்பட வணிக நிலையங்களில் பொலித்தீன் பாவனை முற்றாக தடுக்கப்பட்டு அதற்குப் பதிலாக கடதாசிப் பைகள், வாழையிலைகள் போன்றவற்றைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நல்லூர் உற்சவ முன்னாயத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கையை யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். யாழ். மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த பல்வேறு மட்டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

கடந்த நல்லூர் கோவில் உற்சவத்தின் போது தீர்த்தத் திருவிழா நிகழ்வில் பக்தர்கள் (இளைஞர்) பொலித்தீன் பைகளில் தீர்த்தக் கேணியில் இருந்து தீர்த்தமெடுத்து தெளித்துக்கொண்டனர்.

இதனால் அங்கு கூடியிருந்த பக்தர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகியிருந்தனர் என்பதும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளினால் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஆலய திருவிழா நிகழ்வுகளின்போது பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்குமுறைகளையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (பா)

# கன்னித் திருப்பலி




(நெடுந்தீவு)

நெடுந்தீவு 13 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த, நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் கோயில் பங்கைச் சேர்ந்த திரு, திருமதி பாக்கியநாதர் அமலோற்பவம் தம்பதிகளின் புதல்வர் அருட்பணி அன்ரன் ஜேசுதாசன் (அமல மரித்தியாகிகள் சபை) கடந்த மாதம் 24 ஆம் திகதி யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். பேராயர் தோமஸ சவுந்தரநாயகம் அடிகளாரால் புதிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரது முதல் திருப்பலி நிகழ்வு நேற்று நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக புதிய குருக்களை நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் மலர்மாலை அணிவித்து மாவிலித்துறைமுகத்தில் வரவேற்றதுடன், பெருந்தொகையான கிறிஸ்தவ, இந்து மக்கள், நிறுவனத் தலைவர்கள் பிரதேச சபை தவிசாளர், அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நெடுந்தீவு பங்குத் தந்தை, அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் என பெரும்திரளானவர்கள் திருப்பலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலை 10.00மணிக்கு முதல் திருப்பலியை புதிய குருக்கள் ஒப்புக்கொடுத்தார். அதனைத் தொடர்ந்து அவரை வந்திருந்தவர்கள் புடைசூழ அலங்கரிக்கப்பட்ட வீதி வழியாக அவரது இல்லத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு அவரை வரவேற்க பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மேடையில் அவரது வரவேற்பு நிகழ்வு கோலாகலமாக இடம் பெற்றது.

# தபால் ஊழியர் தூக்கில் தொங்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை தூக்கு மாட்டி இறந்ததாகக் கருதப்படும் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் தெல்லிப்பளை பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி தபாலகத்தில் பணிபுரியும் நடராசா புஸ்பராசா (வயது - 57) என்பவரே இவ்வாறு தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து மல்லாகம் திடீர் மரணவிசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டதுடன் தெல்லிப்பளை பொலிஸாரினால் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

முதலாவது ருவென்ரி - 20

# 32 ஓட்டங்களால் இலங்கை வெற்றி




(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 2 போட்டிகளைக் கொண்ட ருவென்ரி - 20 போட்டியில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை அணி 37ஓட்டங்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது.

அம்பாந்தோட்டை சூரிய வெவ மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஜெயவர்த்தன, டில்ஷான் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். எனினும் ஜெயவர்த்தன 2, டில்ஷான் 5, சங்ககார 19, சன்டிமல் 10, மத்தியூஸ் 9, லொக்குஆராய்ச்சி 11 ஓட்டங்களில் ஆட்டமிழக்க திரிமன்னே 30, திசார பெரேரா 16 பந்துகளில் 2 சிக்ஸர் 2 பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற இலங்கை அணி 20 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் தன்வீர் 3, அஜ்மல் 2, சமி ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு இலங்கை பந்துவீச்சாளர்கள் நெருக்கடியைக் கொடுக்க பாகிஸ்தான் அணி 17.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணி சார்பாக அகமட் ஷேசாட் 36, அஜ்மல் 19 ஓட்டங்களை கூடுதலாக பெற்றனர்.

பந்துவீச்சில் குலசேகர, மலிங்க, மத்தியூஸ் மற்றும் சேனநாயக்க ஆகியோர் தலா 2, திசார பெரேரா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக திசார பெரேரா தெரிவானார்.

## புலிகள்...

செய்யப்பட்டதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை அறிவிக்கப்பட்டது. இந்தத் தடை ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட வேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ சென்னை உயர் நீதிமன்றில் கடந்த மாதம் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய சாத்தியம் கிடையாது என அவர் தெரிவித்திருந்தார்.

## கூட்டமைப்பில் உயர்...

ஆகியோர் பங்கேற்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி லண்டன் சென்றுள்ள போதும் நேற்று பேசப்பட்டு எடுக்கப்படும் தீர்மானத்துக்கு தமது ஒப்புதல் இருக்கும் என்று தெரிவித்ததாக சித்தார்த்தன் குறிப்பிட்டார்

தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் ஆற்றிய உரை தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஏற்பட்டிருந்தது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கு தலைமை வகிக்கும் கட்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி திகழ்கின்றது என்று சம்பந்தன். தனது உரையில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தினை சுரேஷ் பிரேமச்சந்திரன் கடுமையாக கண்டித்திருந்தார்.

எனவே அது குறித்தும் நேற்றைய கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமிழர் நலன்கருதி ஒருமித்த குரலை முன்னெடுப்பதற்காக உயர்மட்டக்குழு ஒன்றை அமைப்பதற்கு அனைத்து கட்சிகளும் இணக்கம் வெளியிட்டதாக சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பில்...

எதிராக எதுவும் நான் கூற மாட்டேன். ஆனால் நிச்சயமாக எமது கட்சியில் பிளவு எதுவும் இல்லை எனத் தெரிவித்தார்.

## விக்கிரகங்கள்...

இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## நல்லிணக்கத்தை...

அடிப்படையில் இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான உறவுகள் அமைந்துள்ளது.

நட்பு நாடு என்ற ரீதியில் இலங்கையின் சகல முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 36 இலங்கையர்...

பட்டவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அகதி அந்தஸ்து கோரியிருந்த இந்த நபர்களை நாடு கடத்த வேண்டாம் என மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், பிரித்தானிய அரசாங்கம் இவர்களை நாடு கடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## கடற்றொழிலாளர்...

உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் 20 வருடங்களாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவராக இருந்து வந்த எஸ்.தவரட்ணம் தனது பதவியை இராஜினாமா செய்துகொண்டதையடுத்து அ.எமிலியாம்பிள்ளை தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உப தலைவராக ச.ரங்கநாயகம் (வேலணை சமாசம்), செயலாளராக க.ராமச்சந்திரன் (காரைநகர் சமாசம்), பொருளாளராக பூ.சகாயராஜா (யாழ்ப்பாண சமாசம்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்மேளன உறுப்பினர்களாக இ.சிவசாமி (வடமராட்சி கிழக்கு), செ.சத்தியசீலன் (தென்மராட்சி), ஆ.பொன்னம்பலம் (வலி.தென் மேற்கு), சி.லட்சுமணன் (ஊர்காவற்றுறை), மதியாபரணம் ஜேம்ஸ் (நெடுந்தீவு), ப.விஜயராவ் (வலிகாமம் வடக்கு), மு.யதீஸ்வரன் (வலிகாமம் மேற்கு) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (பா,116)

# வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 5 கைதிகள் பூஸாவிற்கு மாற்றம்

நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அவற்றில் சம்பந்தப்பட்ட ஐந்து தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றக் காவலில் இருந்து பூஸா தடுப்பு முகாமுக்கு மாற்றுமாறு வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய அவரால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு அமையவே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கைதிகள் சார்பில் ஆஜராகி வாதாடி வருகின்ற சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 1982 ஆம் ஆண்டு திருத்த விதிகளுக்கமைய, பாதுகாப்பு அமைச்சருக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒருவர் பாதுகாப்பு அமைச்சரினால் தேசிய பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்கின்றார் என கருதினால் அவரை விளக்கமறியல் சாலையில் இருந்து குறிக்கப்பட்ட ஓரிடத்தில் வைத்திருக்க முடியும் என்று கூறினார். இந்த சட்ட விதிக்கு அமையவே இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் பூஸா முகாமுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சாதாரண விளக்கமறியல் சாலையில் இருப்பவர்களை அவர்களது உறவினர்கள் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட முடியும். ஆனால் பாதுகாப்பு அமைச்சரின் கடிதத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு மாற்றப்பட்டவர்களை உறவினர்கள் பார்ப்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி கிடையாது என்றும் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் கூறினார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் பத்துப் பேர் வரையில் இவ்வாறு விளக்கமறியல்சாலையில் இருந்து பூஸா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பொன்சேகாவிற்கு அழைப்பில்லை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. செயற்பாட்டு அரசியலில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி எவ்வித அழைப்பினையும் விடுக்கவில்லை என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பொது எதிர்கட்சி ஒன்றை கட்டியெழுப்பவே அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஜெயலத் ஜெயவர்தன சுட்டிக் காட்டினார்.


## ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் பங்கேற்பு

சீனாவில் இன்று ஆரம்பமாகவுள்ள 11 ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்துகொள்ளவுள்ளார். சர்வதேச மூலோபாய கற்கை நெறிகளுக்கான மையம் ஏற்பாடு செய்துள்ள இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் படைத்துறை அமைசசரும், ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவோ அல்லது படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவோ கலந்துகொள்ளவில்லை.

மாறாக, இவர்களுக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கலந்துகொண்டு தெற்காசியாவில் அதிகரித்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் என்ற கருப்பொருளில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளார். கடந்த வருடம் இடம்பெற்ற ஆசிய பாதுகாப்பு மாநாட்டிலும் பீரிஸ் கலந்துகொண்டிருந்தார்.

அதேவேளை, இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள பீரிஸை இந்திய படைத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இந்த மாநாட்டில் அமெரிக்க படைத்துறைச் செயலாளர் மற்றும் இந்தியா, இந்தோனேசியா, அவுஸ்ரேலியா, கம்போடியா, ஜப்பான், மியான்மர், பிலிப் பைன்ஸ், தாய்லாந்து, திமோர், சீனா, மொங்கோலியா, கொரியா, ஜேர்மனி, பிரித்தானியா, மலேஷியா, கனடா, நியூசிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைத்துறை அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



### கந்தையா பொன்னம்பலம்

போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
ஆலய அறங்காவலர், தீக்கரை முருகன் ஆலயம்.
களபூமி, யாழ்ப்பாணம்.

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு (கட்சன் வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் 31.05.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (எஸ்.கே) கந்தையா, சின்னக்குட்டி தம்பதியரின் கனிஷ்ர மகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், ராதா (ஆசிரியை) உமாசங்கர் (விரிவுரையாளர் மருதானை தொழில்நுட்பக் கல்லூரி), தயாபரன் (கணினி பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

காலஞ்சென்ற கந்தையா, நடராசா (ஓய்வுபெற்ற அதிபர், ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். வைஸ்ணவி (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு) அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 01.06.2012 முதல் பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 03.06.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்சன் வீதி,
கொழும்பு.

(C/173)

தகவல்,
குடும்பத்தினர்.

# 2, 3 மாதங்களில் தெரிவிப்பதை ஒரு நாளில் கூறும் பொன்சேகா

### அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்களை கட்டுப்படுத்த இராணுவத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிநடத்தினார் என்றால், பிரபாகரனை ஒடுக்க வழிகாட்டியது யார் என தான் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவிடம் கேள்வி எழுப்புவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். பொன்சேகா, இந்த நாட்களில் தான்கூற வேண்டிய அனைத்தையும் தொடர்ந்தும் கூறி வருகிறார். இன்று அல்லது நாளை சிறைக்கு செல்வோம் என்ற அச்சம் அவரிடம் இருக்கின்றதோ தெரியவில்லை. இரண்டு, மூன்று மாதங்களில் கூறவேண்டியவற்றை அவர் ஒரு நாளில் கூறி விடுகிறார்.

சிறையில் இருந்து விடுதலையானதும், போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் இணங்க வேண்டும் என கருத்து வெளியிட்டார். அரசாங்கம் நடந்துகொள்ளும் விதத்தில் தவறு நடந்துள்ளதாகவே தெரிவதாகவும் கூறினார். இதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு எதிராக இராணுத்தை வழிநடத்தியது ஜனாதிபதியே என தெரிவித்திருந்தார் எனவும் விமல்வீரவனச தெரிவித்துள்ளார்.

# கேரளாவிலிருந்து கடத்தப்பட்ட ஒருகோடி ரூபா கஞ்சா மீட்பு



இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 100 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப் பொருளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியான இந்த கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கற்பிட்டி, உச்சிமுனை கடற்பரப்பில் வைத்து மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவித்த கடற்படையினர், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை கற்பிட்டி பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைத்துள்ளனர்.

# வன்னிப் பிரதேச ஆசிரியர்களின் கஷ்டப் பிரதேச படிகள் நிறுத்தம்

### இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பிரதேசத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேச, அதிகஷ்டப் பிரதேச படிகள் கடந்த ஜனவரி மாதம முதல் வடமாகாண கல்வி அமைச்சினால் நிறுத்தப்பட்டதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இந்நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிககப்பட்டுள்ளதாவது,

கொடூர யுத்தம் முடிவுக்கு வந்து இப்போதுதான் அங்குள்ள பாடசாலைகள் புனரமைக்கப்படுகின்றன. இந்நிலையில் ஆசிரியர்களுக்கான இடருதவி கடனோ அன்றி சலுகை முறையிலான படிகளோ வழங்கப்படாத நிலையில் இந்த அதிகஷ்டப் பிரதேச, கஷ்டப் பிரதேச படிகளை வடமாகாண கல்வி அமைச்சு நிறுத்தியிருப்பது ஆசிரியர்களின் சேவையை அவமதிக்கும் செயலாகும். ஆசிரியர்கள் பெருந்தொகை கடன்பட்டு தமது வீடுகளை புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகைப் பணம் செலவு செய்து வன்னிப் பிரதேசத்திற்கு ஆசிரியர்கள் கடமைக்குச் செல்லும் இவ்வேளையில் இப்படிநிறுத்தமானது மிகவும் பாதிப்பினை ஏற்படுத்துமென சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தயவுசெய்து படிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்த பாடசாலைகளுக்கு அதனை தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதைவிட மன்னார் மாவட்டத்தில் முறையற்ற இடமாற்றங்கள் நடைபெறுவதனை கல்வி அமைச்சின் செயலாளரான தங்களிடம் நாம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் தாங்கள் எடுக்கவில்லை என்றும் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் இடமாற்றம் பெற்ற பாடசாலைகளுக்குச் செல்லும்போது அப்பாடசாலை அதிபர்களால் பலவந்தமாக திருப்பி அனுப்பப்டுவதனையும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவந்தும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காததனை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு சில பணிப்பாளர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு தாங்கள் துணைபோவதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதைவிட வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடமாற்றத்திற்கு தகுதியென்று இடமாற்றச் சபை தீர்மானித்த ஆசிரியர்கள் பலரின் இடமாற்றங்கள் தாமதமாவதற்கான சரியான காரணத்தினை தாங்கள் இன்னும் கண்டறியாமல் இருப்பது வேதனை தருகின்ற விடயமாகும். இது தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம் காட்டுகின்ற அசமந்தத்தன்மையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவை தொடர்பில் தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்காதவிடத்து இதுபற்றி ஜனாதிபதியிடம் முறையிடவும் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# கருஜயசூரிய, மனைவி விபத்தில் காயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரியவும் அவரின் மனைவியும் அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரின் உடல்நிலை ஸ்திரமாக இருப்பதாகவும் ஆபத்தான நிலையில் இவர்கள் இல்லையெனவும் அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.